பக்கங்கள் 12 விலை சதம் 15

# புதினம்

சுவையான செய்திக் கிழமை இதழ்...

வரதர் வெளியீடு

அலுவலகம்: 226, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம், இலங்கை.

மலர் 1 | 25-6-61 ஞாயிறு | இதழ் 2

## குட்டி வெங்காயத்துக்கு ஆபத்து!

**வெங்காய உற்பத்தியாளர்களே! நீங்கள் உற்பத்திசெய்யும் வெங்காயத்தின் சுற்றளவை அளந்து பார்க்கும் சந்தர்ப்பம் வந்துகொண்டிருக்கிறது!**

''யாழ்ப்பாண வெங்காயம் சின்ன வெங்காயம்'' என்ற தென்னிலங்கையின் இழிவுப் பேச்சை நீக்க வடபகுதி விளைபொருட் சங்க சமாசம் சிரத்தை கொண்டுள்ளது. முன்பு விதிக்கப்பட்ட சுற்றளவுக்குக் குறைந்த வெங்காயத்தை எக்காரணத்தைக் கொண்டும் கமக்காரரிடமிருந்து எடுக்கவேண்டாமென விளைபொருட் சங்கங்களிடம் அது வற்புறுத்தியிருக்கிறது. இது சம்பந்தமான சுற்றறிக்கையொன்று அண்மையில் வெளியாகும்.

ஆஸ்பத்திரி

# நிபுணர்களின் 'வீட்டு வைத்தியம்'

## மருந்துத் தட்டுப்பாட்டின் மர்மம் என்ன?

''ஆஸ்பத்திரி 'வார்ட்'டுகளில் இடநெருக்கடியென்ற காரணத்தால் அனுமதிக்க முடியாதென்று மறுத்துவிட்டார்களா? டாக்டர் எழுதித்தந்த மருந்து டிஸ்பென்சறியில் இல்லையென்று மருந்து கலப்பவர் கையை விரித்தாரா? கவலையே வேண்டாம். உடனே 'நிபுணர்' என்ற சிறப்புப்பட்டம் பெற்ற டாக்டர் ஒருவரின் வாசஸ்தலத்துக்குச் செல்லுங்கள். காரியமெல்லாம் கைகூடும். காசின்மேல் பலன் கிடைக்கும்!''

இதுதான் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியைப்பற்றி இன்று உருவாகியிருக்கும் பொதுசன அபிப்பிராயமாகும். அதாவது மேற்படி ஆஸ்பத்திரியில் கடமையாற்றும் 'ஸ்பெசலிஸ்ட்' டாக்டர்கள் சிலர் சேர்ந்து இந்த நல்லபிப்பிராயத்தை அணுவளவும் பிசகவிடாது பாதுகாத்து வருகிறார்கள். எனவே தான் குறிப்பிட்ட அந்த நிபுணத்துவ டாக்டர்களின் வாசஸ்தலங்களில் வெளி நோயாளர் வைத்தியசாலையில் காணப்படுவது போன்ற நோயாளிக் கும்பல் எந்த நேரமும் காத்துக் கிடக்கின்றதென அவதானிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட ஒருசில துறைகளில் நிபுணத்துவம் பெற்றவர்களான டாக்டர்களுக்கு அதற்கெனத் தனியான அலவுன்ஸ் அரசாங்கத்தால் வழங்கப்படுவதுண்டு. சொந்தத்திலும் தொழில் நடத்தவிரும்புபவர்களுக்கு அந்த அலவுன்ஸ்கிடையாது. யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் இரண்டேயிரண்டுபேர்மட்டும்தமது மேலதிகத் திறமைக்காக அலவுன்ஸ் பெறுவதில்லை.

ஏனைய நிபுணர்கள் அலவன்ஸையும்பெற்றுக்கொண்டுதனியாகவும் பணத்துக்கு வைத்தியம் செய்கிறார்களென்பது நிர்வாகபீடத்தின்கண்ணில்நீண்ட நாட்களாக உறுத்திக் கொண்டிருக்கிறது.

உரிய தட்சணையுடன் அவர்களது தயவை நாடியவர்களுக்கு 'வார்ட்'டில் இடம் கிடைப்பதாயும் இதன் பொருட்டு நோய் முற்றுகக் குணமடையாத நிலையில் உள்ளவர்வள் கூட ஈனஇரக்கமின்றி வெளியேற்றப்படுவதாகவும், சொல்லிக்கொள்ளப்படுகிறது.

இந்த ஆஸ்பத்திரியில் மருந்துத்தட்டுப்பாடு அடிக்கடி ஏற்படுவதற்கு ''வீட்டு வைத்தியம்'' தான் காரணமாயிருக்க வேண்டுமென்பது சந்தேகம்!

விட்டமின் 'பி' என்ற வில்லை பெரியாஸ்பத்திரியில் தட்டுப்பாடு இருந்துவருகிறது. ஆனால் அங்கு கடமையாற்றும் டாக்டர் ஒருவருக்கு இரகசிய தொடர்புண்டென்று கருதப்படும் தனிப்பட்ட டிஸ்பென்சரியொன்றில் அது தாராளமாகக் கிடைக்கிறதாம்!


## நாணயம் கெட்ட ஐக்கிய சங்கங்கள்

வங்கிகளிற்பட்டகடனைத்திருப்பிக்கட்டாது நீண்டகாலமாக மௌனம் சாதித்து வரும் ஐக்கியநாணய சங்கங்கள்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும் முயற்சியில் கூட்டுறவு இலாக்கா தீவிரமாக கவனம் செலுத்தி வருகிறது. காலந்தப்பிய கடன் என்ற வகையில் ஒதுங்கிக் கிடக்கும் பணத்தைஎப்படியும் அறவிட்டேயாக வேண்டும் என ஐக்கிய சங்கப் பரிசோதகர்கள் ஒவ்வொருவருக்கும் மேலதிகாரிகள்கட்டளையிட்டுள்ளனர்.


அனேக சங்கங்கள் இருந்த இடம்விட்டுமறைந்துவிட்டதாயும், அவற்றின் புத்தகங்கள் கறையானுக்குஇரையாகி விட்டனவென்றும், நீண்டகாலமாகக் கடனைத் திருப்பித்தராது டிமிக்கி விட்டவர்களிற் பலர் இறந்து விட்டார்களென்றும் அறிக்கைகள் தெரிவிக்கின்றனவாம்.

எத்தனையோ ஐக்கிய நாணய சங்கங்கள்தம்வருடாந்தக் கூட்டங்களை நடத்தி ஆண்டு பத்துக்கு மேலாகிறதென்றும் இதனால் தனுதிகாரிகளும் அவர்களிடத்துள்ள கையிருப்புகளும் எங்கேயென்பது சிதம்பரரகசியமாம்.

**மயானகாண்டமும் மையல் காண்டமும் —சிவாஜி.**



சோமுப் பெரியார் 'வீட்டுக்கு முதலாளி'



சோமுப் பெரியார்: இந்த அறையைக் கூட்டிவிடச் சொன்னேனே காதில் விழவில்லையா?

வேலைக்காரி: இல்லை ஐயா, அம்மா தான் முதலில் பாத்திரங்களை கழுவச் சொன்னு.

சோ. பெ.: கழுதை! நான்சொன்னதைச் செய்யாமல்...... அம்மாதான் இந்தவீட்டு முதலாளியோ?...

சோ, பே.: ஹி...ஹி...ஹி...ஒன்றுமில்லைப் பாரும்...நீர் பாத்திரங்களை கழுவச் சொன்னீராம் முதலில் அதைச் செய்யும்படி கனகியிடம் சொன்னேன்......

# திடீர் மரணம்!

'அஸிட்' யுகம் போய்இப்பொழுது 'பொலிடோல்' யுகம்பிறந்து விட்டது.அதுவும் போதாதென்று விபத்துக்களும் கோரதாண்டவம் புரிந்தால்......

பத்து நாட்களில் பரிதவித்துச்செத்தவர்களின் எண்ணிக்கையைப் பாருங்கள்.

● மரத்தில்ஏறி ஒரு கிளையை வெட்டிய அரியாலை வாசியான நாகன் சின்னத்தம்பி மரத்திலிருந்து தவறி வீழ்ந்து இறந்தார்.

● பரீட்சையில் கண்ட தோல்விக்குப் பரிகாரமாக நல்லூரைச் சேர்ந்த மாணவன் சிவக்கொழுந்து இராசதுரை கழுத்தில் சுருக்கிட்டு உயிர்நீத்தார்.

● மானிப்பாயைச் சேர்ந்த மாணவன் இராஜேஸ்வரன் உடைந்து வீழ்ந்த பள்ளிக்கூடத்தூணுக்குப் பலியானன்.

● முதுமையையும் பொருட்படுத்தாதுமரத்திலேறிமாங்காய் பறித்தார் கந்தர் மடத்தைச் சேர்ந்த கார்த்திகேசு சின்னையா. கையிலிருந்து தவறிய கூடையை எட்டிப்பிடிக்க முயன்றபோது கால்வழுக்கி நிலத்தில் வீழ்ந்ததால் எலும்புகள் முறிந்து மரணமானர்.

● இளநீர் பிடுங்கத் தென்னையிலேறிய காங்கேசன்துறை நடேஸ்வரக் கல்லூரி மாணவன் சிவரத்தினம் வழுக்கி வீழ்ந்ததால் உயிர் துறக்க நேர்ந்தது.

● வேலணை வாசியான குமாரவேலு தன் உயிரைப் போக்க பனைமரத்தின் உச்சிவரை ஏறிச்சென்று கழுத்தில் சுருக்கிட்டு மாண்டார்.

● சரவணையைச் சேர்ந்த பராசக்தி என்றபெண் நச்சுத்திராவகத்தை அருந்தி அதன் மூலம் தன் வாழ்வுக்கு முடிவு தேடிக்கொண்டார்.

# பல்கலைக் கழகவிருந்து ரத்துச்செய்யப்பட்டதுஏன்?

பேராதனையிலுள்ள இலங்கைப் பல்கலைக் கழகத்தில் ஒவ்வொரு வருட இறுதித்தவணையிலும் இறுதி வருடத் தமிழ் மாணவர்களின் பிரியாவிடைக்காக ஒரு தேநீர் விருந்து நடைபெறுவது வழக்கம். ஆனல் இம்முறை இவ்விருந்து திடீரென ரத்து செய்யப்பட்டது. இதற்குரிய காரணம் "அந்த நேரத்தில்நடைபெற்றுவந்த ஒரு இயக்கத்திற்கு உதவியளிப்பதே" என்று கூறப்பட்டது. விருந்துக்கென ஒதுக்கப்பட்ட பணம் அந்த இயக்கத்திற்கு நன்கொடையாக அனுப்பப்பட்ட செய்தியும் பத்திரிகைகளில் வெளிவந்தது. ஆனல் —

### உண்மைக் காரணம்:

விருந்து ரத்து செய்யப்படுவதற்குரிய உண்மைக் காரணமோ வேருகஇருந்தது. இதை மூடுமந்திரமாக மறைத்துவிட்டார்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகள். சுருக்கமாகக் கூறினல் மாணவர்களிடையே ஏற்பட்ட மோதல்தான் இதற்கு அடிகோலிய காரணமென செய்தி கிடைத்துள்ளது.

### ஓடித்திரிந்த மாணவி

பல்கலைக் கழகத்தில் இராமநாதன் விடுதியில் இருக்கும் மாணவர்களென்ருல் பொதுவாகப் பெண்களுக்குப் பிடிக்காதாம். அங்கிருப்பவர்களெல்லாம் "ரௌடிகள்" என்பதே அவர்களின் அபிப்பிராயமாம். ஒழுங்கு செய்யப்பட்டிருந்த விருந்து நேரத்தில் இராமநாதன் விடுதி மாணவர்களைக் கண்டித்துப் பேசுவதற்காக பலரிடமும் பேசும் விஷயத்திற்கான கருத்துக்களைச் சேகரிப்பதற்காக ஓடித்திரிந்தார் "ஜேஸ் பீரிஸ் விடுதி" யைச் சேர்ந்த ஒரு மாணவி.

### விருந்தா குழப்பமா...?

இந்த விஷயத்தை எப்படியோ அறிந்து கொண்ட ராமனுதன் விடுதியைச் சேர்ந்த ஒரு மாணவர் அதைப்பற்றிப் பேராசிரியரிடம் முறையிட்டார். ராமநாதன் விடுதியைச் சேர்ந்த தமிழ்மாணவர் அந்தமாணவி தாக்கிப் பேசினுல், அதற்கு எதிர்மொழி கூறுவதற்குத்த மக்குச் சந்தர்ப்பம் அளிக்கவேண்டும். இல்லாவிட்டால் விருந்தை விட்டு 'வெளிநடப்புச் செய்வோம் என்று அவர் கண்டிப்பாகத் தெரிவித்தாராம்.

இதனுல், விருந்து குழப்பத்தில் முடியுமோ என்று பயப்பட்ட பேராசிரியர், ஒழுங்கு செய்திருந்த விருந்தை ரத்து செய்துவிட்டு அதற்குரிய பணத்தை குறிப்பிட்ட இயக்கத்திற்கு அனுப்பிவிட்டாராம்.

இந்த உண்மைக் காரணம், பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பல தமிழ் விரிவுரையாளர்களோடு பெரும்பாலான தமிழ் மாணவர்களுக்குந் தெரியாதாம். ஆனல் இனிமேல்....

— பட்டதாரி


வெளிவந்து விட்டன!

வித்வான் க. வேந்தனர் அவர்களால் எழுதப்பட்ட

S. S. C. வகுப்பிற்குரிய

இலக்கிய விளக்கவுரை

கம்பராமாயணம்

காட்சிப் படலம்—நிந்தனைப் படலம்

380 பக்கங்கள் கொண்ட சிறந்த நூல்

விலை ரூபா 3-50

பாரதியார் பாடல்கள் உரை

180 பக்கங்கள் விரிவான விளக்க உரை

விலை ரூபா 1-50

இவ்விரு நூல்களும் மாணவர் உள்ளத்தில் இலக்கிய உணர்ச்சி ஊற்றெழத்தக்கதான பதவுரையும் பொருள் விளக்கமும், செய்யுள் நயமும் கொண்டதோர் புதிய உரைகளுடன் அமைந்தவை.

வெளியிடுவோர்:

— ஸ்ரீலங்கா புத்தகசாலை —

234, கே. கே. எஸ். ரோட்டு, யாழ்ப்பாணம்.

# இளம் பெண்கள் அடிமைகளாக விற்பனை!

# அழகிய மனைவிகளையே விற்ற மகானுபாவன்.

## அடிமை எதிர்ப்புச் சங்கந்தரும் ஆதார பூர்வமான தகவல்கள்.

பத்தொன்பது வயது நிரம்பிய அதிரூபவதியான அரேபியப் பெண்ணொருத்தி சமீபத்தில் கெய்ரோ நீதிஸ்தலத்தில் வந்து நின்றாள். இவளின் தோற்றம் பார்ப்பதற்கு பாரசீக மாஜிராணி சுரையாவைப் போன்றிருந்தது. ஆனால் அவளின் அழகு அப்பெண்ணின் கணவன் சம்பந்தப்பட்டவரை வெகுசாதாரணந்தான்'.

நீதிபதியிடம் முறையிட்டாள்:

“எனக்கு மணமாகி ஒரு மாசந்தானாகிறது. அதற்குள் என்னை விற்றுவிடப் போவதாக என் கணவர் கூறுகிறார். நான் சுரையாவைப் போன்றிருப்பதால் நல்ல விலைக்கு என்னை விற்க அவர் முடிவு செய்திருக்கிறார்.”

இதற்குமுன் அறுபத்தைந்து மனைவிமார்களை பாரசீகச் செல்வந்தர்களுக்கும், அரேபிய இளவரசர்களுக்கும் தனது கணவன் விற்றதாக அந்தப் பெண் கூறினாள். இவர்களில் ஒரு பெண்ணாவது அந்த ஆசாமியை எதிர்க்கத் துணியவில்லையாம்.

அந்தப் பெண்ணின் கதையைக் கேட்ட நீதிபதி விவாகரத்துக்கு அனுமதி வழங்கியதோடு அவளுக்கு நஷ்டஈடு கொடுக்கும்படியும் தீர்ப்பளித்தார்.

சௌடி அரேபியாவிலுள்ள சில பகுதிகளில் அடிமைகளை விற்பதோ, வைத்திருப்பதோ ஒரு குற்றமாகாது. ஆனால் ஆட்களைக் கடத்திச் சென்று பணமீட்டுபவர்கள் செல்வாக்குள்ள குடும்பங்களிலிருந்து பெண்களைக் கடத்திச் சென்றுவிற்கும்போது சில தொல்லைகள் விளைகின்றன.

மிகப்பெரிய செல்வந்தர் ஒருவரின் மருமகளை அடிமைகளைக் கடத்திச் செல்பவர்கள் ஒரு சமயம் பிடித்துச் சென்றுவிட்டார்கள். செல்வந்தர் தலையிடுமுன் அப்பெண் அரசகுடும்பத்தினருக்கு விற்கப்பட்டுவிட்டாள்.

பெண்ணைத் தேடிச் சென்ற அவள் குடும்பத்தினர் அடிமைகளை விற்கும் சந்தையில் அப்பெண்ணும் ஏலத்தில் விற்கப்பட்டுவிட்டாள் என்ற செய்தி கேட்டுச் சீறி எழுந்தனர். ஒருபெரிய ஒட்டகப்படையைச் செல்வந்தர்திரட்டி எப்படியும் தன் மருமகளை மீட்டுவரும்படி கட்டளை விதித்தார். இதற்கிடையில் அரசகுடும்பத்துக்குச் செய்தி போய்விட்டது. இரத்தக்களரியைத் தடுப்பதற்காக அவர்கள் ஒரு விததீங்கும் விளைக்காமல் பெண்ணை விடுதலைசெய்துவிட்டனர்.

இன்றைய அடிமைகளுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை ஆதாரபூர்வமாக லண்டனிலுள்ள அடிமைகள் எதிர்ப்புச் சங்கம் வெளியிட்டிருக்கிறது.

அவர்கள் வெளிப்படுத்திய தகவல்கள் மிகவும் பயங்கரமானவை. சௌடி அரேபியாவில் குழந்தைகள் வேலை செய்யும் பண்ணைகள் இருக்கின்றனவாம். அல்ஜீரியா, டியூனிஸ் வீதிகளிலிருந்து பால் மணம் மாறாப்பச்சிளம் சிறார்களைக் கடத்திச் சென்று மேற்படி பண்ணைகளில் வேலை வாங்குகிறார்களாம். அடிமைகளில் ஆண்களைக் காட்டிலும்



அடிமையாக விற்கப்பட்ட ஒரு அழகி

பெண்களுக்கே மதிப்பதிகம். பெண்கள் மேலும் பல அடிமைகளைப் பெற்றுத்தரக்கூடியவர்களென்பதும் அதற்கு ஒரு காரணமாகும்.

பெண் குழந்தைகள் நடக்க ஆரம்பித்ததுமே வேலை வாங்கப் படுகிறார்கள். சில சமயங்களில் இக்குழந்தைகள் பெரிய பண்ணைகளுக்கு எடுத்துச்செல்லப்பட்டு ஆரம்ப வேலைகளில் பயிற்சியளிக்கப் படுகிறார்கள். இவர்கள் விற்பனைக்குத் தயாரான பருவத்தை அடையும்போது கூடிய விலைக்கு விற்கலாம் என்பதற்காகவே இவ்விதம் குழந்தைப் பருவத்திலிருந்து வேலை வாங்கப்படுகிறார்கள்.

ஆபிரிக்கா, மத்திய, தூர கிழக்குநாடுகளிலும் அடிமைகளை ஏலத்தில் விற்கும் வழக்கம் இருந்து வருகிறது.

தென் அமெரிகாவில் அடிமைகள் மிகவும் கொடுமைப் படுத்தப் படுகிறார்கள். பெரு என்ற இடத்தின் சிலபகுதிகளில் ரப்பர்த்தோட்ட முதலாளிகளுக்கு அடிமைகள் விற்கப் படுகின்றனர். இங்குள்ள பயங்கரக் காடுகளில் இந்த அடிமைகள் வேலைக்கு அனுப்பப் படுகின்றனர். இவர்களில் பாதிப்பேர் உயிரோடு திரும்பி வருவதில்லை.

## அவரவர் வேலை

‘உங்கள் வேலையைநீங்களே செய்யுங்கள். என்றகொள்கை அமெரிக்காவில் அதிகமாகப் பரவிவருகிறது. தங்கள் உடைகளைத் தாங்களே வெளுக்க வசதியாக இவ்வருடத்தில் மூவாயிரம் நிலையங்கள் திறக்கபடவிருக்கின்றன.

50 நிமிடங்களில் ஒவ்வொருவரும் தங்கள் உடைகளை வெளுக்கமுடியும். இதற்குப் பத்து ஷிலின் தான் செலவாகும்.

## மாடுகள் படுப்பதற்கே சொகுசுப் படுக்கை — அங்கே! மனிதர்கள் படுப்பதற்குத் தடுக்கும் இல்லை — இங்கே!

படுக்க ஒரு தடுக்குக்கூட இல்லாமல் நம்நாட்டில் பல்லாயிரக்கணக்கான ஏழைகள் கஷ்டப்படும் இந்நாளில் மாடுகள் படுத்துத் தூங்குவதற்கு மேல்நாடுகளில் நைலோன் படுக்கைகள் தயாரிக்கிறார்கள்.

பால்பண்ணை மேல்நாட்டில் அதிக வருமானத்தை ஈட்டிக் கொடுக்குந்தொழில். சீமெந்து நிலத்தில் படுப்பதால் மாடுகள் குளிரினால் அவஸ்தைப்படுகின்றன. அவைகளுக்கு வைக்கோல் படுக்கைகள் தயாரித்துக்கொடுத்தாலோ பொழுது விடியுமுன் உள்ளேகால்வைக்க முடியாத அளவுக்குப் பண்ணை அசுத்தமாகிவிடுகிறது. இதனால் பண்ணையிலுள்ள பசுக்களின் சுகாதாரம் பாதிக்கப்படுகிறது. இந்த நிலைமையைச் சமாளிக்க ஸ்கொட்லாந்திலுள்ள ஒரு கம்பெனி பசுக்களுக்கு நைலோன் படுக்கைகள் தயாரிக்கமுற்பட்டார்கள். இந்தப் புதிய மெத்தை பிளாஸ்டிக் பொடியினாலானது. உறை நைலோனினால் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

இந்தப் படுக்கையைக் “கௌலே” என்று கூறுகிறார்கள். இது வெகுவிரைவாகக் காயும் தன்மையுள்ளதாம். பசுந்தாக உள்ள இந்தப் படுக்கையில் பசுக்கள் சுகமாகத் தூங்குகின்றனவாம்.

## பல் துலக்க மின்சாரம்!

சகலமும் விஞ்ஞானம் எல்லாவற்றிற்கும் மின்சாரம் என்று வாழும் அமெரிக்க மக்கள் இப்பொழுது மின்சார பற்குச்சிகளை உபயோகிக்கிறார்கள்.

‘மின்சார ஷவரம்’ இப்பொழுது பழையபாடமாய் விட்டது. ஒருவிசையை அழுத்திவிட்டு பற்குச்சிக்குமுன் பல்லைக் காட்டிக்கொண்டு நிற்கவேண்டியதுதான். அது தானாகவே துலக்கிவிடும். சுகபோகத்திலுள்ள செல்வந்தர்களுக்குத்தான் இது பொருந்தும். ஒருமின்சாரக்கருவியும், இரண்டு பற்குச்சிகளும் அமெரிக்காவிலேயே 6 பவுண் (சுமார் 80 ரூபா) ஆகின்றன. ஒருபற்குச்சி கூடியது மூன்று மாசம் பாவிக்கலாம். பத்துப் பேர் கொண்ட ஒரு குடும்பத்தில் பல் தேய்ப்பதற்கு மட்டும் மாசம் என்ன செலவாகும்? நீங்களேசிந்தித்துப்பாருங்கள்.

# திரை மறைவில்

## கோமாளி நடிகர்கள்:

அரசியலென்பது நகைச் சுவைக் கட்டங்கள் மலிந்த ஒரு துன்பியல் நாடகம். சேவகன் வேகத்தில் ஒரேயொரு முறை தோன்றிவிட்டு அப்படியே மறைந்துவிடும் துரையப்பாக்கள் தொடக்கம் மன்னர் வேடத்தில் தோன்றி மேடையையே அமர்க்களப் படுத்திவிட்டு மங்கி மறையும் 'பொன்னன்'கள் வரையும் இந்த அரசியல் துன்பியல் நாடகத்தில் பாத்திரமேற்று நடித்திருக்கிருர்கள். இந்நாடகத்தில் கோமாளி வேஷம் ஏற்று நடிக்கும் பாக்கியம் ராஜரத்தினக்கோனர் தம்பதிகளுக்குத்தான் கிடைத்திருக்கிறது. கிருஷ்ணன்-மதுரம் சோடிகூட இவர்களிடம் பிச்சை வாங்க வேண்டும் போங்கள்.

## உண்ணுவிரதத் தெருக்கூத்து!

ராஜரத்தினக்கோனர் தம்பதிகள் சில தினங்களுக்கு முன்பு நடத்தி முடித்த 'உண்ணுவிரதத் தெருக்கூத்து' என்னும் நாடகத்தைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள்! உண்மையான கோமாளிக் கூத்துத்தான் அது. இம்மாதம் எட்டாம் திகதி வியாழக்கிழமையன்று பிற்பகல் இரண்டு மணிக்கு மனைவியும் மற்றும் ஏழெட்டு நண்பர்களும் புடைசூழ ராஜரத்தினக்கோனர் பாராளுமன்றக் கட்டிடத்தை நோக்கிச் சென்றார். சபாநாயகரின் கார் நிறுத்தப்படும் பகுதிக்குச் சென்றதும், தான் உண்ணுவிரதம் இருக்கப்போவதாக அறிவித்துவிட்டுக் கையோடு எடுத்துக்கொண்டு சென்ற படுக்கை விரிப்பை விரித்துவிட்டு அதன்மேல் படுத்தார்.

உண்ணுவிரதமிருப்பதற்கும் காரணமேதாவது வேண்டுமல்லவா? சுப்ரீம் கோட்டுத் தீர்ப்பு தனக்கு நீதியளிக்கவில்லை என்பதே அவரின் காரணம்.

## 'தகா' தொட்டதும் ஆர். ஜி. பார்த்ததும்

உண்ணுவிரதம் ஆரம்பமாகிய சில தினங்களில் திரைமறைவில் சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அரசாங்கக் கட்சிக்குள் ராஜரத்தினக் கோனரின் உண்ணுவிரதத் தெருக் கூத்தை ஆதரிப்பவர்களும் எதிர்ப்பவர்களும் இருப்பதைத் தெரிந்துகொண்ட அரசியல் பெருச்சாளிகளான விஜயானந்த தகநாயக்காவும் கட்சிவிட்டுக் கட்சிபாய்ந்து கடைசியில் எல்லாக் கட்சிகளாலும் விரட்டியடிக்கப்பட்ட ஆர். ஜி. சேனநாயக்காவும் ராஜரத்தினக் கோனருக்கு மன்னிப்பு அளிக்கும்படி கவர்னர்-ஜெனரலைக் கோரும் கடிதமொன்றை எழுதிக் கையெழுத்துப் பெறும் வேட்டையை ஆரம்பித்தனர். 'தகா தொட்டதும் ஆர். ஜி. பார்த்ததும் சர்வ நாசம்' என்பதற்கிணங்க மன்னிப்பு முயற்சியும் நாசமாகிவிட்டது என்று சொல்லவும் வேண்டுமா?

## பலனளிக்காத தூது முயற்சி

உண்ணுவிரதம் ஆரம்பித்ததற்கு அடுத்த தினம் மந்திரிசபை வட்டாரங்களிலிருந்தும் சில முயற்சிகள் எடுக்கப்பட்டனவாம். 'நானே ராசா' அமைச்சரின் முழு ஆசியுடன் ஓரிருவர் திருமதி ராஜரத்தினக் கோனரை அணுகினர்களாம். ''உண்ணுவிரதத்தைக் கைவிட்டுவிட்டு வழக்கம்போல் மன்னிப்புக்கோரி கவர்னர் - ஜெனரலுக்கு விண்ணப்பியுங்கள். அப்போது எல்லாவற்றையும் பார்த்து விடுகின்றோம்'' என்று சொன்னர்களாம் 'தூது' சென்றவர்கள். திருமதி ராஜரத்தினக் கோனர் அதற்கு இணங்கவில்லை. ''என்ன? சாதாரண குற்றவாளிகள் போல் எங்களை நடந்துகொள்ளச் சொல்கிறீர்கள். இது ஒரு அரசியல் வழக்கு. அரசியல் வழக்காகவே பார்க்கவேண்டும். அவர்இந்த உண்ணுவிரதத்தால் மடிந்தால் அதே இடத்தில் நான் இருந்து உண்ணுவிரதத்தை தொடர்வேன்'' என்று சீறினராம் அப் பெண்.

## பிரச்சாரம் கிடைக்கவில்லை:

கோட்டின் தீர்ப்பை மாற்ற அரசாங்கம் இணங்காது என்பதும் இவ்வுண்ணுவிரதத்திற்குப் பொது மக்களின் ஆதரவு கிடைக்காது என்பதும் தெளிவாகியதும் உண்ணுவிரதத்தின் நோக்கத்தை மாற்றுவதற்கு ராஜரத்தினக் கோனர் கோஷ்டியினர் படாத பாடுகளெல்லாம் பட்டனர். பேராபத்தைத் தவிர்ப்பதற்காகவே ராஜரத்தினக்கோனர் உண்ணுவிரதம் இருக்கிருர் என்ற தொனியில் நீண்ட அறிக்கையொன்றைத் தயாரித்துப் பத்திரிகைகளுக்கு அனுப்பி வைத்தார்கள். பத்திரிகைகள் அறிக்கைகளைத் தகுதி வாய்ந்த அதிகாரியின் பரிசீலனைக்கு அனுப்பி வைத்தன. அவர் அவைகளைப் பிரசுரிக்க அனுமதிக்கவில்லையாம் அத்துடன் ராஜரத்தினக் கோனரின் பிரசார முயற்சியும் தோல்வியடைந்துவிட்டது.

## கண்டுபிடிப்புச் சக்தி வளர்ச்சி:

''ஜுலை முதலாந் திகதிக்குப் பின்பு குதிரைப் பந்தயச் செய்திகளுக்குத் தடை''—செய்தி.

வாலாம்பிகை: பார்த்தியா தம்பி! எமது அரசாங்கம் பொதுமக்களின் வாழ்க்கையைத் திருத்துவதில் எவ்வளவு அக்கறை கொண்டுள்ளதென்று!

சிவபாதசுந்தரம்: இல்லை அக்கா! எமது மக்களின் கண்டுபிடிப்புச் சக்தியை வளர்ப்பதில்தான் எமது அரசாங்கம் அதிக அக்கறை காட்டுகிறது அக்கா!

வாலா: உதென்ன புதுக் கண்டுபிடிப்பு?

சிவ: சர்க்கரையில் கள்ளச் சாராயம் வடித்தார்கள். சர்க்கரை இறக்குமதியைத்தடைசெய்தது அரசாங்கம். சிவப்புச் சீனி, பழம்சோறு, இளநீர் அழுகிய உருளைக்கிழங்குபோன்ற பல பொருட்களிலிருந்து கள்ளச்சாராயம் காய்ச்சக் கண்டு பிடித்துவிட்டார்கள்.

வாலா: அதேபோல குதிரைப்பந்தயச் செய்திகளையும் களவாக அச்சடித்து விநியோகிக்க வழிகள் கண்டுபிடித்து விடுவார்கள் என்கிருயா?

சிவ: நிச்சயமாக. போலீசாருக்கும் ஐந்தைப் பத்தைத் தள்ளிவிட்டால் கண்களை இறுக மூடிக்கொள்கிருர்கள்.

## சொல்லாராய்ச்சி:

'துரோகி' என்ற சொல்லின் மருவலே 'சேகரம்' என்ற சொல் என்பது மொழி நூல் வல்லாரின் தேர்ந்த முடிவாம். துரோகி-துரோகம்-துரோகரம்-சோகரம்-சேகரம் என்று மருவியதாக அவர்கள் சொல்கிருர்கள். எமக்கும் சரிபோலத்தான்தெரிகிறது.

## நாடக விளம்பரம்:

வருகிறது! வருகிறது!
தலைவர்களே! ஆதரவாளர்களே!
கட்சி அபிமானிகளே!
உங்களெல்லாருக்கும் ஒரே தடவையில்
அடிவாங்கிக் கொடுக்க வல்ல அரிய நாடகம்
எமது கட்சியின் யாழ்ப்பாணக்கிளை அளிக்கும்

**— துரோகம் —**

கதைவசனம்: வைத்திலிங்கம்.
டைரக்சன்: பொன்னம்பலம்.
நிச்சயம் வாருங்கள்! அடி உதை பெறுங்கள்!!

## பத்திரிகை அறிக்கைகள்:

பத்திரிகைகட்கு அறிக்கைகள் விடும் பழக்கத்தை அரசியல்வாதிகள் குறைத்துக் கொள்ள வேண்டுமெனப் பர்மாப் பிரதமர் ஊநூ அரசியல் வாதிகளுக்கு அறிவுரை வழங்கியிருப்பதாக வாசித்தேன். நல்ல அறிவுரைதான். ஆனல் பின்பற்ற முடியுமா? பின்வாங்கும்பிரதிநிதிகளாகப் பிரசித்தமடைந்துள்ளசில 'தலைவர்'கள் தாங்களும் இருப்பதாகப் பொதுமக்களுக்கு அறிவிப்பதற்கு வழி பத்திரிகைகளுக்கு அறிக்கைகள் விடுவதன்மூலம்தானே! தொண்டைமானையும் செல்வநாயகத்தையும் தேடிப் பத்திரிகை நிருபர்கள் செல்வார்கள். சாதாரண பிரதிநிதிகள் வேறு யாரையாவது கொண்டு எழுதிய அறிக்கைகளுடன் (சொந்தமாக அறிக்கை எழுதுபவாகள் ஒரு சிலர்தான்!) பத்திரிகைநிருபர்களைத் தேடித் தானே அலையவேண்டும்? பாவம் அந்தப் பிரதிநிதிகள்!

— அம்பலத்துறைவோன்

நீதிபதிக்கு முன்னல்:

## ஆசைநாயகியுடன் அவள் கணவன்

''நான் திடீரென உள்ளே நுழைந்தபோது எனது கணவனும் அவரின் ஆசைநாயகியும் ஒரே படுக்கையில் படுத்திருப்பதைக் கண்டேன். என்னைக் கண்டபோதும் அவர்கள் தங்களை மூடிக்கொள்ளக் கூட முயலவில்லை. அவர்களை அந்த நிலையில் பாக்கச் சகிக்காததால் நான் வெளியே சென்றுவிட்டேன்'' என்று திருச்சி மாவட்டக் கோடொன்றில் நடைபெற்ற விவாகரத்து வழக்கில் சாட்சியமளிக்கும் போது பருவ எழில் பூத்துக் குலுங்கும் மனைவியான காந்திமணி கூறினர். தன்னை அலட்சியம் செய்துவிட்டு ஆசை நாயகியுடன் தனது கணவன் வாழ்க்கை நடத்துவதாகவும் எனவே தனக்கு விவாகரத்து வழங்கும்படியாகவும் கோரி காந்திமணி வழக்குத் தொடர்ந்திருந்தாள்.

கணவனின் வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்தார்.

கே: நீ ஏன் அங்கு சென்ருய்?

ப: எனது கணவன் அங்கே சென்று நேரத்தைச் செலவிடுவதாக அறிந்தேன். உண்மையா என்று பார்ப்பதற்காக நேரில் சென்றேன்.

கே: அங்கே என்னத்தைக் கண்டாய்?

ப: எனது கணவனும் 'ஊரிலுளள் ஆடவரைப் பிடிக்கும்' அந்தப் பெண்ணும் ஒரே கட்டிலில் இருந்தார்கள்.

கே: ஆணும் பெண்ணும் கட்டிலில் இருப்பது தவரு?

ப: ஆணும் பெண்ணும் ஒருவரையொருவர் அணைத்துக் கொண்டு பிறந்த மேலோடு இருப்பது முறையானதாக எனக்குத் தெரியவில்லை சாமி! (சிரிப்பு)

கே: நீ ஏன் உனது கணவனைப் பிடித்து இழுத்துச் செல்லவில்லை?

ப: பிறந்த பிறப்பாக இருக்கிற மனுஷனை எப்படி இழுத்துச் செல்வது!

மேல் விசாரணை 28-ம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.





''ஆற்றிலே தூண்டி
அரைமணியாய்த் ...
அகப்பட்டது ஒரேயெ...
தான் ''என்று கா...
ந்து சென்னை திரு...
சாவித்திரி கூறினர்...
ரில் தங்கியிருந்தபோ...
கட்டியில் சறுக்கிவி...
ராம்.

''ஒய்வுக்காக என்...
டன் சென்றேன், ஆ...
வெடுக்க முடியவில்லை...
அலுக்கும்வரை நட...
தேன்'' என்று சாவி...
ணர்.

சென்ற மாதம் பு...
'தேன் நிலவு' பட...
வெளிப்புறக் காட்சிக...
பதற்கு ஜெமினி க...
காஷ்மீர் சென்றிருந்...
சந்தர்ப்பத்தைப் பய...
காஷ்மீரில் ஓய் வெ...
காக சாவித்திரியும் ...
ந்தார்.

காஷ்மீர் நதியில் நீ...
த்துக்கொண்டு செல்...
க்கு விளையாட்டு உன்...
யில் ஒரு இயந்திர ...
முன்னே செல்லும். அ...
இரண்டு நீளக் கயிறு...
தொங்கும், அந்தக்க...
பிடித்துக் கொண்டு ...
பலகைகளில் கால்க...
துக் கொண்டு நீர்பே...
வேண்டும். படகு செ...

சுரு...

ஜெமினி—சாவி...
ஜாகர்த்தா பய...

ஜாகர்த்தாவில் அடுத்...
நடக்கவிருக்கும் சினிமா...
வில் கலந்துகொள்ள ஜெ...
சனும், சாவித்திரியும் ...
திகதி புறப்படுகிறார்கள்...
சென்னை பிலிம் வர்த்...
தலைவர் திரு. ஏ. எல். ...
தலைமையில் செல்லும் ...
கர் கோஷ்டி சிங்கப்பூர் ...
ஜாகர்த்தா செல்லும்.

சாவித்திரிக்கு...
கால் உடைந்...
கார் ரேஸில்...

சித்தூர், பழமானேரி...
தில் கார் ரேஸ் ஒன்று ந...
ஸில் கலந்து கொண்...
பேரும் பெண்கள். கூட்...
கேட்கவேண்டுமா?

சினேகிதிகள் ஐந்தாறு...
மிடுக்காக காரை ஓட்டி...
திரி. கார் காற்றெனப்...
அவருக்குத்தான் வெற்றி...

# கடலினுள் வாழும் விநோத மனிதர்கள்!

## ‘மச்சகன்னியர்’போன்றகட்டுக்கதையல்ல;

கடலுக்குள் மனிதர்கள் வாழ்கிறார்கள் என்று ஒருவர் கூறினால் நீங்கள் நம்புவீர்களா? நீங்கள் நம்பினாலும் சரி நம்பாவிட்டாலும்சரி; நான் கூறுகிறேன் கடலுக்குள் மனிதனைப் போன்றபிராணிகள் வாழ்கின்றன.

மச்ச கன்னிகள் பற்றி வெவ்வேறு விதமான அபிப்பிராயம் நிலவுகிறது. இவர்கள் கற்பனையில் உதித்த கன்னிகள் என்கின்றனர் சிலர். ஓரளவாவது உண்மையை அடிப்படையாகக்கொண்டே கற்பனை பிறக்கிறது என்பது ஒரு சாரார‌து வாதம். ஆனால் மச்ச கன்னிகள் நிச்சயம் கடலில் வாழ்கிறார்கள் என்று சிலர் இன்றும் நம்புகிறார்கள். கடல் மனிதர்களைப் பற்றிய உண்மைகளை அறிவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சபோக்கிலுள்ள ‘ஓர் போட்’ தேவாலயத்தில் பிரார்த்தனை நடைபெற்றுக்கொண்டிருந்தது. திடீரென்று எல்லோர் கண்களும் ஆச்சரியத்தோடு ஒரு உருவத்தை நோக்கின. அதுஓர் அதிசயப்பிராணி. மனிதனைப்போலவே இருந்தது. ஆனால் ஆடைஅணிந்திருக்கவில்லை. உடலெல்லாம் அடர்ந்த ரோமம். தலையில்மட்டும் ரோமம் இல்லை. அந்தப் பிராணியை ஓர் யோட் கோட்டையின் வேலையாட்கள் இருவர் கொண்டு வந்திருந்தனர். “காட்டு மனிதன்” என்று பிரார்த்தனைக்கு வந்தவர்கள் திகைப்போடுகூறினார்கள். கோட்டையின் கவர்ணர் ‘காட்டு மனித’னைப் பிரார்த்தனைக்கு அனுப்பியிருக்கிறார் என்று அவர்கள் பேசிக்கொண்டார்கள்.

இந்த அதிசயப் பிராணியைப் பற்றி நாம் அறிந்துகொள்ள வேண்டுமானால் ரால்ப்டீ கொக்ஷால் என்பவர் பதின்மூன்றும் நூற்றாண்டில் எழுதிவைத்துள்ள குறிப்புகளை நாம் புரட்டிப் பார்க்க வேண்டும். இவர் ஒரு மதகுரு மட்டுமல்ல சிறந்த கல்விமானும்கூட. இவருடைய குறிப்பின்படி இந்த மனிதப் பிராணி 1204ம் ஆண்டில் உள்ளூர் மீன்பிடியாளர்களால் கடலில் பிடிக்கப்பட்டதெனத் தெரிகிறது. மீன்பிடிப்பதற்கென விரித்த வலையில் இந்த அதிசய மனிதன் அகப்பட்டான். இதைப் போன்ற ஒரு பிராணியை இதற்கு முன் அவர்கள் பார்த்ததில்லையாகையால் மூன்று பேர் சேர்ந்து மிகவும் சிரமத்தோடு அதைக் கரைக்குக்கொண்டு வந்தனர். அதை வைத்துக் கொண்டு என்னசெய்வதென்று புரியாத அவர்கள் அந்த நீர்

### 13-ம் நூற்றாண்டில் எழுதப்பட்ட உண்மைக் குறிப்புகள்.

மனிதனைக் கோட்டைக் கவர்ணரிடம் கொண்டு சென்றனர்.

அந்த அதிசய மனிதன் மீது கவர்ணருக்கு அக்கறை பிறந்தது. நீர் மனிதன் அமைதியோடு உட்கார்ந்திருந்தான். கொடுக்கும் இறைச்சியையும் மீனையும் வாங்கிச் சாப்பிட்டான். தூங்குவதற்கும் அவனுக்குப் பயிற்சியளிக்கப்பட்டது. ஆனால் சகல அம்சங்களிலும் மனிதனைப்போலவே காணப்பட்ட அந்த அதிசயப் பிராணியில் ஒரேயொரு குறை மட்டும் காணப்பட்டது. அதனால் பேசமுடியவில்லை. கவர்ணர் எவ்வளவோ முயற்சி செய்தும் ஒரு சிறிய ஓசைகூட அதன் வாயிலிருந்து புறப்படவில்லை.

கவர்ணருடைய வேலையாட்கள் படிப்பு வாசனையற்றவர்கள். ஏதோ தனது சொந்தக் காரணத்தால் வேண்டுமென்றே கடல் மனிதன் ஊமையைப்போல் பாசாங்கு செய்கிறான் என்று அவர்கள் முடிவுசெய்தார்கள். அதைப் பேச வைப்பதற்காக எவ்வளவோ சித்திரவதை செய்தார்கள். அதன் கால்களைக் கட்டித் தலைகீழாகத் தொங்கவிட்டு வதைத்தார்கள். ஆனால் அதன் வாயிலிருந்து முனகல்கூடவெளிப்படவில்லை. இந்தக் கடல் மனிதன் ஊமையாக இருக்கலாம் என்று கருதினார்கவர்ணர். பிரார்த்தனைக்காகத்தேவாலயத்துக்கு அதை அழைத்துச் சென்றார். ஆனால்என்றும் போலவே அமைதியாக அந்த அதிசய மனிதன் உட்கார்ந்து கொண்டிருந்தான். கவர்ணருக்கு எரிச்சலாகவிருந்தது. உட்கார்ந்த இடத்திலேயே சதா உட்கார்ந்து கொண்டிருக்கும் அந்த மனிதப் பிராணிமீது ஏற்கனவே இருந்த அக்கறை குறைந்து விட்டது.

‘ஓர்’ என்ற நதி கோட்டைச்சுவரை மருவிப்பாய்கிறது. அந்நதியின் ஒரு பகுதியை மறித்து அணை போட்டுச் சுவர் எழுப்பியிருந்தார் கவர்ணர். நீர் மனிதனை அங்கு அவர் அழைத்துச்சென்று சிறை வைத்தார். அதன் பின் அந்த அதிசய மனிதன் என்னவானான் என்று தெரியவில்லை, கவர்ணர் தனது குறிப்பில் அந்த மனிதப்பிராணி தப்பிச் சென்றுவிட்டது என்று குறிப்பிட்டிருக்கிறார்.

ரால்ப் டீ கொக்ஷால் சாதாரண மனிதரல்ல. அவரது குறிப்புகள் சரித்திர ஆராய்ச்சியாளர்களால் பெரிதும் போற்றப்படுபவை. மேற்படி நீர் மனிதனைப்பற்றிய அவரது ஆணித்தரமான குறிப்புகளிலிருந்து நிச்சயம் அப்படியொரு மனிதன் இருந்தான் என்று நாம் ஒப்புக்கொள்ள வேண்டித்தானிருக்கிறது. ஆனால் கடந்த ஏழுநூற்றாண்டுக் காலத்தில் அப்படியொரு நீர் மனிதனை வேறுயாராவது பார்த்திருக்கிறார்களா?

1814-ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 20-ந் திகதி வெளியான ‘அபடீன் குரணிகிள்’ என்ற பத்திரிகையில் ஒரு பாடசாலை ஆசிரியரின் கடிதம் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. அக்கடிதத்தில் மற்றோர் நீர் மனிதனைப் பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இரண்டு மீன்பிடியாளர்கள் கரையிலிருந்து சுமார் அரை மைல் தூரத்தில் ஓர் அதிசயப் பிராணியைக் கண்டதாகவும், படகில் அவர்கள் அந்தப் பிராணிக்குச் சமீபமாகச் சென்று பார்த்தபோது அரைக்கு மேற்பாகம் மட்டுமே நீர்மட்டத்திற்குமேல் தெரிந்ததாகவும், அப்பிராணி மனிதனைப் போலவேயிருந்ததென்றும் பச்சையும் சாம்பரும் கலந்த நிறங்கொண்ட அப்பிராணிக்கும், மனிதனுக்கும் அதிக வேற்றுமையில்லையென்றும், துரதிர்ஷ்டவசமாகஅரைக்குக் கீழ்ப்பாகம் நீரில் இருந்ததால் பார்க்கமுடியவில்லையென்றும் கடிதம் கூறுகிறது. இந்தப் பிராணிக்கும் உடலில் உரோமம் இருந்ததாம்.

‘ஓர்போட்’ கோட்டையிலுள்ள குறிப்புகள் இன்றும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. ரால்ப் டீ கொக்ஷாலின் குறிப்புகள் உண்மையின் அடிப்படையில் எழுதப்பட்டவை என்பதற்கு நிறைய ஆதாரங்கள் உள்ளன.



கணவன்: உனக்கு என்ன வேண்டும் கேள்......என் தங்கமல்ல, கண்ணைக் கசக்காதே. பட்டுப் புடவை வேண்டுமா? அல்லது உன் அம்மா வீட்டுக்குப் போய்வரப் போகிறாயா? சினிமா, கோவில்......

மனைவி: போதுமே உங்கள் தொந்தரவு. எனக்கொன்றும் வேண்டாம், அடுத்த முறையாவது காய்ந்த விறகாகப் பார்த்து வாங்கி வாருங்கோ......

# யாழ்-மா நகரசபையும் கேள்விப் பத்திரங்களும்

“ஆனை கலக்கிய குளம்” என்பார்களே அந்நிலைக்கு வந்துவிட்டது நமது யாழ்ப்பாண மாநகரசபையினர் நிர்வாகம்,

மின்சார உபகரணங்கள் சம்பந்தமான கேள்விப்பத்திரங்கள் அழைப்பது பற்றித் தற்போது யாழ் மாநகரசபையில் நெருக்கடி உருவாகியிருக்கிறது.

முன்பெல்லாம் கேள்விப்பத்திரங்களைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளே முதலில் திறப்பார்களாம். இப்பொழுது அந்த முறைமாற்றியமைக்கப்பட்டிருக்கிறதுபோல் தெரிகிறது. அல்லாமலும் கேள்விப்பத்திரங்களைப் பரிசீலிப்பதற்கு ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டிருக்கிறதாம்.

நகர சபைக்குப் பத்தாயிரம் பேனைக்கள் வேண்டுமென்றால் ஒரு பேனையின் விலையைக் குறிப்பிடும்படியே கேள்விப்பத்திரங்கள் அழைப்பார்கள். என்ணிக்கை எவ்வளவு என்று தெரியாதவர்கள் ஒரு பேனை ஒரு ரூபாய்க்குத் தருவதாக விண்ணப்பிப்பார்கள். பதினாயிரக்கணக்காகப் பேனைக்கள் தேவைப்படுகிறதென்று தெரிந்தால் அவர்கள் இன்னும் விலையைக் குறைத்துக் கொடுக்கலாம். இந்தவிஷயத்தைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விண்ணப்பகாரர்களிடம் கூறித்தாங்களும் கமிஷன் அடிக்க இடமுண்டாகுமோ வென்ற சந்தேகத்தில் மேற்படி கமிட்டி நியமிக்கப் பட்டதோ வென்னவோ? எது எப்படியானாலும் பழையபழக்கத்தை மாற்றுவது மனக்கஷ்டத்தை கொடுக்கத்தான் செய்யும்.

# ஒரு நிமிஷம் பிந்தினால் என்ன நடந்திருக்கும்?

## தக்க சமயத்தில் வந்த சீதாவின் நண்பன்!



அவளுடைய அம்மாவின் 'நண்பன்'தான் செல்வா. அழகன்; இளைஞன். ஆனாலும் அவனைக்கண்டால் சீதாவுக்குப் பிடிப்பதில்லை. இருந்தபோதிலும் அம்மா இல்லாத நேரத்தில் வந்தவனை உபசரிப்பது கடமையென்று கருதி சோடாவை ஊற்றிக் கொடுத்தாள். அவனுடைய நோக்கமோ.........

சீதாவுக்கு அன்று கல்லூரி இல்லை. மத்தியானம் சாப்பிட்டுவிட்டு 'காதல் புரிவது எப்படி?'' என்ற யாரோ எழுதிய புத்தகத்தைச் சுவைத்த படி படுக்கையில் புரண்டவள், கண் விழித்தபோது நேரம் 4-40!

மேசையில் கோப்பி வைத்து கோப்பையால் மூடப்பட்டிருந்தது. சீதா எழுந்துபோய் முகத்தைக் கழுவிக்கொண்டு வந்து கோப்பியைக் குடித்தாள். அது லேசாக ஆறிப்போயிருந்தது. அப்படியானால் அம்மாவும் வேலைக்காரனும் வெளியில் போய் பத்து பதினைந்து நிமிடந்தானாயிருக்க வேண்டும். போகட்டும்; வழமைப்பிரகாரம் அவர்கள் எங்காவது பண்ணைத்துறைப் பக்கம் காற்றுவாங்கப் போயிருப்பார்கள்!

வீட்டில் யாருமில்லை; சுண்டிக்குளியிலுள்ள அந்தப் பெரிய மாளிகையில் தனிமையாக இருக்க சீதாவுக்குவெறிச் சென்றிருந்தது.

மாலை நேரத்தில் வெளியில் செல்ல அணியும் உடைசளை எடுத்து அணிந்தாள். பெரிய மேசைலாச்சியை இழுத்து கைக்கடிகாரத்தை எடுத்தாள். இலேசாக உதடுகளுக்கு லிப்ஸ்டிக்கை தடவினாள். கண்ணாடியில் பார்த்தபொழுது பந்தய மோட்டப்போகிற அழகான அராபியக்குதிரை போல, ஜம்மென்றிருந்தது அவளுடைய தோற்றம்!

எங்கு செல்வது? யாரைக் கூட்டிச் செல்லலாம்?

சீதாவின் அப்பா கொழும்பில் பெரிய அரசாங்க உத்தியோகத்தர். கறுவாக் காட்டில் வீடு இருந்தால்தான் சொந்த ஊரில் நடப்பு பெருமை என்பதோடு, கொழும்பில் பெரிய மனிதர்கள் வட்டாரத்திலும் தனது அந்தஸ்தை காட்டலாம் என வீடு வாங்கி குடும்பத்துடன் குடியேறியிருந்தார். ஆனாலும் 1958ஜூன் மாதத்துக்குப் பிறகு மனைவியையும் மகளையும் திருப்பி யாழ்ப்பாணத்துக்கே அனுப்பிவிட்டார். கறுவாக் காட்டிலிருந்து சுண்டிக்குளிக்கு குடியேறியது இடமாற்றமே தவிர சீதாவுக்கும் தாய்க்கும் வேறெந்த வகையிலும் சிரமமாயிருக்கவில்லை. சுண்டிக்குளி சமுதாய அமைப்பும், பழக்க வழக்கங்களும் இருவருக்கும் ஒத்துப்போய் விட்டன.

'சீ, சந்திரனும் வரவில்லை! ... ஜேம்ஸ்சும் வரக்காணோம்! ராஜாவாகுதல் வந்தால் ...' சீதாவின் மனம் அலுத்துக் கொண்டது

வெளி விருந்தையிலுள்ள சோபாவில் வந்து சீதா உட்கார்ந்தாள்.

''கடைசி அடுத்த ரேட்டிலுள்ளலீலா வந்தாளென்றாலாவது அரைமணிநேரம் கேரமாவது விளையாடலாமே?''

இன்னும் ஒருவரும் வரவில்லை!

சந்திரன் வந்தால் அவனோடு கூட சீதா முற்றவெளிப்பக்கம் உலாவப் போகலாம்!

ஜேம்ஸ் வந்தால் அவனுடைய காரில் ஜாலியாக யாழ்ப்பாணக் கடை வீதிகளையாவது ஒரு சுற்றுச்சுற்றிக் கொண்டு வரலாம்!

ராஜா வந்தால் கூடிப்போய் சூடான ஆங்கில சினிமாப்படமொன்றைப் பார்க்கலாமே!

சீதாவின் நண்பர்கள் யாருமே இன்னும் வரவில்லை. நேரம் 5-30 ஆகிவிட்டது!

அமெரிக்க மாத சஞ்சிகை ஒன்றை மடியில் வைத்துப் புரடிக் கொண்டிருந்தாள். வளவளப்பான காகிதத்தில் ஹொலிவுட் நடிகைகளின் முக்கால் நிர்வாணப்படங்கள், காதலர்களின் இறுக்கமான அணைப்புக் காட்சிகள், இன்னும் ....... அவள் சுவைக்கக் கூடிய பலவேறு படங்களும் விடயங்களும் சஞ்சிகையில் நிறைந்திருந்தன!

இனவிருத்தி - பால்கவர்சி துறைகளில் ஊறிப்போய் சீதாவின் உள்ளம் ஆராய்ச்சியிலிறங்கியிருந்தது. உடலில் ஓடும் ரத்தம் சூடேறிக்கொண்டிருந்தது. எதையாவது செய்துவிடவேண்டும் போல் துடிதுடிப்பாயிருந்தது.

அந்தச் சமயகதில் தான் அவன் அங்கே வந்தான்.

அவன் —

அவனை 'அம்மாவின் காதலன்' என்று சொல்வது அருவருப்பாகத் தோன்றினால் 'அம்மாவின் நண்பன்' என்று சொல்லலாம். ஆம். அது அவளுக்கும் தெரியும். இரண்டொருமுறைஅவனும் அவளுடைய அம்மாவும் முத்தமிட்டுக்கொண்டதைக் கூட அவள் பார்த்திருக்கிறாள் முதலில் 'என்னவோ' போலத்தோன்றினாலும் பிறகு பிறகு அவளுக்கும் பழக்கமாகிவிட்டது.

நியாயமாகப் பார்க்கப்போனால் சீதா கூட ஜேம்ஸோடு ...

அவனுடைய பெயர் செல்வராஜா. 'செல்வா' என்றுதான் அம்மா குறிப்பிடுவதுவழக்கம். அம்மாவைவிட அவனுக்குப் பத்துவயதாவது குறைவாகத்தானிருக்கும். அழகானவன், ஆனாலும் என்னவோ அவனைக் கண்டால் சீதாவுக்குப் பிடிக்கிறதில்லை. அவன் மிகவும் சினேகபாவத்தோடு சீதாவுடன் கதைக்க முனைவதுண்டு. ஆனால் அவள் தட்டிக் கழித்துக்கொண்டு போய்விடுவாள்.

இன்று அம்மா இல்லை அவள்தான் ஏதாவது அவனோடு கொஞ்சநேரம் கதைத்து அனுப்பவேண்டும்!

'ஹலோ! சீதா, .. எங்கேயோ புறப்பட்டுவிட்டீர் போலிருக்கிறதே?' என்று கேட்டுக்கொண்டே செல்வா சோபாவில் அமர்ந்து விட்டான். வேறுவழியின்றி சீதாவும் அமர்ந்தாள். மனதுக்குப்பிடிக்காவிட்டாலும். வெளிக்கு மரியாதை செய்கிற ஒரு போலிக்கௌரவம் இருக்கிறதே, அதற்காக, அவனுக்கு குளிர்சாதனப் பெட்டியிலிருந்து ஒரு சோடாவை எடுத்து வந்து கிளாசில் ஊற்றிக்கொடுத்தாள்.

செல்வா அதைப் பருகிக் கொண்டே, அவள்பார்த்துக் கொண்டிருந்த அமெரிக்கப்பத்திரிகையில் கவர்ச்சிப்படங்களைப் புரட்டி ரசித்தான்.

அதே சமயம் கடைக்கண்ணால் சீதாவைப் பார்த்தான். அந்தப்பார்வையின் அர்த்தம் அவள் நெஞ்சை ஊடுருவிச் சென்று நடுங்கவைத்து.

அவன்பார்த்த அதேபடங்கள் அவளுடையதனிமையைக் கிளறி உணர்ச்சியைக் கிளப்பிவிட்டிருந்தது உண்மைதான்.

இவன் வந்ததுபோல ராஜா வந்திருந்தால்—

அல்லது ஜேம்ஸ் வந்திருந்தால்—

அவர்களில் ஒருவனிடம் அவள் தன்னையே ஒப்புவித்திருக்கமாட்டாளா?

ஆனால்—

இவனும் அழகானவன்தான், இளைஞன்தான். ஆனாலும் 'அம்மாவின் காதலன்' என்ற நினைப்பு அவளை என்னவோ செய்தது

''சீதா ! .....'' என்றான் செல்வா. எங்கேயோ பார்த்துக்கொண்டிருந்தவள் திரும்பி அவனைப்பார்த்தாள், அவன் கையிலிருந்த பத்திரிகையைத் திருப்பி ''இதைப் பார்த்தாயா?'' என்று கேட்டான்.

அதில் —

முக்காலே மூன்று வீசமும் நிர்வாணநிலையில் கிடந்த ஒரு அமெரிக்க நடிகையின் மேல் அவளுடைய திரைப்படக்காதலன் சாய்ந்து முத்தமிடக் குனியும் கவர்ச்சித் தோற்றம்!

சீதா பார்த்தாள். முந்தியே பார்த்த படந்தான். என்ன சொல்வதென்று அவளுக்குத் தோன்றவில்லை. அடுத்த கணமே அவன் விபரீதமாக என்ன சொல்வானோ என்ற பயம்......

'ரீங்... ரீங்...' என்று வாசலில் மோட்டார் 'ஹோரண்' சத்தம் கேட்டது.

சீதா துள்ளி எழுந்தாள்.

'மன்னித்துக் கொள்ளுங்கள் நான் வெளியே போகிறேன்' என்று கூறிவிட்டு மோட்டாரை நோக்கி ஓடினாள்.

அங்கே அவளுடையஜேம்ஸ் சிரித்த முகத்தோடு அவளுக்காகக் கதவைத் திறந்துவைத்துக்கொண்டு காத்திருந்தான்!

நல்ல
அச்சுவேலைகளுக்கு
ஆனந்தா
அச்சகம்
226, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

# அந்தோ, யாழ் மாநகர சபை!

ஏவற்பேய் கூரையைப் பிடுங்குமாம். 'பேயாவது, கூரையாவது இதெல்லாம் இந்தக் காலத்தில் நடக்கிற சங்கதியா' என்று ஐயப்படுகிறவர்கள் யாராவது இருந்தால் அவர்கள் யாழ்ப்பாணம் நகராட்சி மன்றக் கூட்டத்துக்கு ஒரு தடவையாவது சமுகமளித்துத் தங்கள் சந்தேகத்துக்கு முடிவுகட்டிக்கொள்வது நல்லது. அங்கே சில ஏவற்பேய்கள் வழக்கம்போலத் தம் ஆசானின் சொற்படி ஆட்டம்போட்டுக் கூட்டங் குழப்ப முயன்றதைப் பார்த்து கடந்த 16-6-61 ,வெள்ளிக்கிழமை நடந்த கூட்டத்துக்கு வந்திருந்தவர்கள் கைகொட்டிச் சிரித்தார்கள். நிகழ்ச்சிகள் ஒழுங்காக நடப்பது அவற்றுக்குப் பிடிக்கவேயில்லைப்போலும். அடிக்கடி உருக்கொண்டு ஆடின ஆட்டத்தையெல்லாம் மேயர் துரைராசா அடக்கியது அவரது திறமைக்கு ஒரு எடுத்துக்காட்டு.

## பிலிப்பின் தொற்றுநோய்:

அண்ணன் பிலிப்பும் அவர்தம்பி ரூபேட்டும் பார்லிமென்டிலே தொடக்கி வைத்த சம்பிரதாயம் இருக்கிறதே அது கொழும்பு மாநகரைத் தாண்டி யாழ்மா நகரசபையிலும் வந்து தொற்றிக்கொண்டு விட்டதோ என்றுதான் அன்று எண்ணத் தோன்றியது. கோட்டை வட்டார அங்கத்தவர் திரு. இராசசூரியர் சபை நடவடிக்கைகளில் அடிக்கடி குறுக்கிட்டு. மேயரின் ஆணையை மீறிப் பேசியதும் அவரை மேயர் பெயர் சொல்லி எச்சரித்தபோதெல்லாம் "ரூபேட் பிலிப்" பாரம்பரியத்தை விட்டுக்கொடுத்துப் பெட்டிப் பாம்பாக அடங்கியதும் சமயாசமயங்களிலெல்லாம் ஹாஜி அபூசாலி அவரைத் தட்டிக்கொடுத்துத் தானும் இருப்பதாகக் காட்டிக்கொண்டதும், நகைச்சுவை நாடகம் போன்றிருந்தது.

## சூத்திரப் பாவைகள்;

பெருங்காயம் வைத்த சாடி எப்போதும் நாறிக்கொண்டேயிருக்குமென்று சொல்வார்களல்லவா? யாழ்ப்பாணம் எம். பி. திரு துரையப்பா மாநகர சபையிலிருந்து நீங்கி மாதங்கள் ஆறு சென்றுவிட்டனவாயினும் அவரது பெயர் இச்சபையில் சதா கிளம்பிக்கொண்டேயிருக்கிறது. துரையப்பா சபையில் இல்லாவிட்டாலும் அவரைப்பற்றிய பிரச்சினைகள் கிளம்பும்போது எவராலோ எங்கிருந்தோ முடுக்கிவிடப்பட்ட சூத்திரப் பாவைகள் போல் ஆடச் சாட்சாத் அங்கத்தவர்கள் சிலர் காத்துக்கொண்டேயிருக்கிறார்கள். இந்த ஏவற்பேய் விளையாட்டுத்தான் அன்றைய கூட்டத்திலும் பெரும் கேலிக்கூத்துகளுக்கு இடமளித்தது. ஆடத் தொடங்கியவர்கள் முடிக்கத் தெரியாமல் தத்தளித்தார்கள். பாவம் முடிப்பது எப்படியென்பதை கேட்டுவரமறந்துவிட்டார்கள்போலும்.

## கடிதமா கூடாசியா?

"சென்ற கூட்டத்தில் தீர்மானித்தபடி துரையப்பாவுக்கு பைல்களைத் திருப்பித்தருமாறு கடிதம் எழுதப்பட்டதா? அவர் தனக்குக் கடிதம் எதுவும் கிடைக்கவில்லையென்று சொல்கிறாரே" என ஒரு சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொண்டே எழுந்த திரு. இராசசூரியர் 'இதுதான் அவருக்குத் தபாலில் கிடைத்தது' எனக் கூறிச் சில காகிதங்களை மேயரிடம் காட்டினர். முன்னுக்குப் பின் முரணாக அவர் நடந்து விட்டதைக்கண்டு சபையில் எழுந்த சிரிப்பொலி 'கடிதம் அல்லக் கடதாசி' என்ற மேயரின் கிண்டலைக்கேட்டு மேலும் அதிகரித்தது.

## ஒட்டக்கு முறை

இப்படியே சம்பந்தமில்லாத குறுக்கீடுகளும் குதர்க்கங்களும் அடிக்கடி அன்றைய கூட்டத்தில் தலைநீட்டின. சுமார் ஐந்து தட்வை திரு. இராசசூரியரை மேயர் எச்சரித்து ஆசனத்தில் அமர்த்தவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது; (12-ம் பக்கம் பார்க்க)

“நத்தையாய்ப் பிறந்திலனே
இந்த மானிலத்தே”
— சிவாஜி.




# இலவச மின்சாரம்?

பார்லிமென்டின் உள்ளே நுழையும் கதவோரமாக ஒரு பொலீஸ்காரன் நின்றான். ஏன் நின்றானென்பது பாவம் அந்தப் பொலீஸ்காரனுக்குந் தெரியாது, உள்ளேயிருந்த அங்கத்தவர்களுக்குந் தெரியாது. பொதுசனங்களுக்குந் தெரியாது.

எதிர்க்கட்சி அங்கத்தவர் ஒருவர் பார்லிமென்டிலேயே கேட்டார் ஏன் இந்தப் பொலீஸ்காரன் ஒரு வேலையுமில்லாமல் சும்மா நிற்கிறானென்று. யாராலும் பதில் கூற முடியவில்லை ஏன் நிற்கிறானென்று உடனேதெரிவிக்கும்படி ஐ. ஜி. பி.க்குஅறிவித்தார் மந்திரி.

ஐ ஜி. பிக்குந் தெரியவில்லை. பழைய ரெக்கோட்டுகளையெல்லாம் புரட்டினார்கள்; கடைசியில் விஷயம் வெளிப்பட்டது.

பலவருடங்களுக்கு முன் ஒரு சமயம் கதவுக்கு மைபூசியபோது உள்ளே செல்லும் அங்கத்தவர்களுக்கு 'மை காயவில்லை' என்று கூறுவதற்காக ஒரு பொலீஸ்காரன் கதவுக்கருகாமையில் நிறுத்திவைக்கப் பட்டான். மை முப்பது வருடமாகக் காய்ந்துகொண்டிருக்கிறது; அவனும் நின்றுகொண்டேயிருக்கிறான்.

இதைவிடச் சுவையான சம்பவமொன்று யாழ்மா நகர சபையில்அண்மையில்நடந்தது 1959-ம் வருட முற்பகுதியில் இங்குள்ள ஒருவருக்கு மின்சாரம் வழங்கப்பட்டது. தான் உபயோகித்த மின்சாரத்துக்கு 'பில்' இன்று வரும் நாளை வரும் என்று காத்துக்கொண்டிருந்தார் இவர். ஆனால் வருடம் இரண்டரைக்குமேலாகியும் அவருக்கு 'பில்' கிடைக்கவில்லை. ஓரேயடியாக என்றாவது 'பில்' வந்து சேர்ந்தால் வீட்டையே விற்றுப் பணம் கட்டவேண்டியேற்பட்டுவிடுமோ வென்று பயந்த அந்த மனிதர் நேராக நகர சபைக்குச் சென்று விஷயத்தை விளக்கினார், ஆனால் புத்தகங்களில் அவர் பெயுரையே காணவில்லையாம்.

"நீங்கள் எதை வேண்டுமானாலும் செய்யுங்கள். நான் இப்பொழுது 125 ரூபா கொண்டு வந்திருக்கிறேன். இதற்கு ஒரு தற்காலிக பற்றுச் சீட்டுத் தாருங்கள்" என்று பாவம் அந்த மனிதர் கூறி பற்றுச் சீட்டை வாங்கிக்கொண்டு சென்றாராம்.

# இரும்பு மலை!

மத்திய ஆபிரிக்காவிலுள்ள ஒரு ஒதுக்கப்பட்ட பிரதேசத்தில் இரும்புமலை யொன்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இந்த மலை முழுவதும் இரும்பாலானதாம். இதிலுள்ள இரும்பின் பெறுமதி நூறு கோடி பவுண்கள் என்று மதிக்கப்பட்டிருக்கிறது.

500 மைல் நீளங்கொண்ட ஒரு புகையிரதப் பாதையை அமைப்பதுபற்றி ஆராய சென்ற பிரிட்டிஷ், பிரஞ்சு ஜெர்மன் எஞ்சினியர்கள் இந்த இரும்பு மலையைக் கண்டுபிடித்தனர். இந்த மலையில் 50 லட்சம் தொன் நிறையுள்ள உலோகம் இருக்கிறதென அவர்கள் கணக்கிட்டிருக்கிறார்கள்.

நீங்களே வழி சொல்லுங்கள்:

# படகு கவிழ்ந்தது!

## காப்பாற்றப்பட்ட பெண்ணிடமே வம்புசெய்கிறுன் படகோட்டி.

'தர்ம சங்கடம்' என்று மகாபாரம், இராமாயணம் ஆகியவற்றில் சில சம்பவங்கள் வர்ணிக்கப்படுகின்றன. 'அஸ்வத்தாமன் இறந்தான்' என்று துரோணருக்குக் கேட்கும்படி தருமர் கூறுகிர். தன்னுடன் போர் செய்யாத வாலியை மறைந்து நின்று இராமர் கொல்லுகிருர். இவைகள்தான் தர்மசங்கடமான நிலையென்று வர்ணிக்கப்படுகின்றன. இப்படிச் சம்பவங்கள் நமது வாழ்க்கையிலும் நிகழ்வதைக் காண்கிருேம். கீழே தரப்பட்டிருக்கும் சம்பவத்தைப் பாருங்கள். தீர்ப்புக் கூறுவது உங்கள் பொறுப்பு.

வாலிபன் ஒருவன் தனது இளம் மனைவியோடு கடற்கரை ஓரமாக நடந்து வந்து கொண்டிருந்தான். படகிலே ஏறிக் கடலில் சிறிது தூரம் பிரயாணம் செய்யவிரும்பிய தன்மனைவியின் ஆசையை நிராகரிக்கமுடியாமல் ஒரு படகுக்காரனை அவன் அணுகினன்.

கடல் கொந்தளிக்கிறது என்று படகோட்டி கூறினன். ஆனல் அவள் பிடிவாதம் செய்தாள். படகு புறப்பட்டது.படகோட்டி இளம்காளை. அவனது உரமேறிய கரங்களிலிருந்து துடுப்புகள் அலையோடு போர் புரிந்தன. இளம் சோடி இல்வுலகை மறந்து சல்லாபித்தது.

படகோட்டி ஓரக்கண்ணுல் அவர்களை அடிக்கடி திரும்பிப் பார்த்தான். அநாகரீகந்தான், ஆனல் அவனும் மனிதன் தானே..

திடீரென்று ஒருபேரலை. படகு கவிழ்ந்து விட்டது. தம்பதிகள் நீரிலே திக்கு முக்காடினர். படகோட்டியின்கையில்முதலில்அவள் தான் அகப்பட்டாள். கரையிலிருந்து சுமார் அரைமைல் தூரத்தில் நீர் மத்தியிலிருந்தகாக்கைப்பாறைக்கு அவளைக்காப்பாற்றிச் சென்றுன். அந்தப்பாறையில் காக்கைகள் வந்து உட்காருவதால் அது காக்கைப் பாறை என்று அழைக்கப்படுகிறது.


உடலோடு ஒட்டிய உடையோடு பொற்சிலை போல நிற்கும் அழகியை ஒருமுறை நிமிர்ந்து பார்த்தான் படகோட்டி.

'ஐயோ, அவரைக் காப்பாற்றேன்' என்று அலறியபடியே அலைகளோடு போராடிக் கொண்டிருக்கும் கணவனைச் சுட்டிக் காட்டினுள் அவள்.

'காப்பாற்றுகிறேன் ...' தயங்கினுன் அவன். 'என்னை அணைத்து ஒரு முத்தமிடு. நிச்சயம் அவரைக் காப்பாற்றுகிறேன்' என்ற அவன் கண்களில் ஆசை வெறி!

இனிநீங்களே கூறுங்கள் அவள் என்ன செய்தாள்?

[26-6-61க்கு முன் 'அவள் என்ன செய்தாள்' என்றபதிலைச் சுருக்கமாக எழுதி அனுப்புங்கள் சிறந்தபதில்2-7-61 புதினத்தில்வெளியிடப்படும்.]



ரௌடி: உங்கள் தம்பி என்னைப்பற்றிப் பிழையாகச் சொல்லித்திரியிருராம்.கொஞ்சம் தவனியுங்கோ......

பெரியவர்: உன்னைப்பற்றி சரியாகச் சொன்னுலெல்லோ நீ கவலைப்படவேணும் பிழையாய்ச் சொன்னுல் நல்லது தானே?

## ஆண்களே அதிக விசரர்கள்!

'ஆண்கள் விரைவாக மூளை நோய்க்கு இலக்காகிவிடுகிருர்கள்' என்று மூளைநோய் வைத்தியர்கள் கூறுகிருர்கள். பெண்கள் எதையும் தங்களுக்குள்ளேயேவைத்து ஓயாது மூளையை அலட்டிக் கொள்வதில்லை. தமது உணர்ச்சிகளை அவர்கள் கண்ணீரின் மூலம், அல்லது வாய்ச்சண்டையின்மூலம், அல்லது சட்டிபானைகளை உடைப்பதின்மூலம் வெளியேற்றிவிடுகிருர்கள். ஆண்கள் எல்லாத் தொல்லைகளையும் தங்களுக்குள்ளேயேமூடிவைத்துக்கொண்டு குமைகிருர்கள், இதனுல் மூளைநோய் ஆண்களை அதிவிரைவாகப்பற்றிக்கொள்ளுகிறது.

# அழகுராணி — அழகுராசா போட்டி!

## உங்கள் ஓவியத் திறனைக் காட்டவும்

# ஒரு நல்ல சந்தர்ப்பம்!

முற்றிலும் புதுமையானமுறையில் ஒரு அழகுராணியையும் அழகுராசாவையும்தெரிவுசெய்யும் போட்டியை புதினம் நடாத்த முன்வந்துள்ளது அத்துடன்உங்கள் ஓவியத்திறமையைக் காட்டவும் இதுஒரு நல்லசந்தர்ப்பம். எல்லா வாசகர்களும் இதில் கலந்துகொள்ளலாம். ஆனல் ஒரு நிபந்தனை அழகுராணியைத் தெரிவதில் ஆண்கள் மட்டுமே பங்குபற்றலாம். அழகுராசாவைத் தெரிவதில் பெண்கள்மட்டுமே பங்குபற்றலாம்.

நீங்கள் செய்யவேண்டியது என்ன?

ஆண்கள் தங்கள் கற்பனையில் உதித்த அழகுராணியின் படத்தை வரைந்து அனுப்பவேண்டும். நல்லவெள்ளைக் கடதாசியில் கறுப்பு இந்தியன் இங்மையினல் வரையவேண்டும். வர்ணம் தீட்டக்கூடாது.

படத்தின் அளவு"8 × 4" ஆக இருக்கவேண்டும்.

இதேமாதிரி பெண்கள் தமதுகற்பனை அழகுராசாவை வரைந்து அனுப்பவேண்டும்.

ஒருவரே எத்தனைபடங்கள் வேண்டுமானலும் அனுப்பலாம். ஆனல் இதனுடனுள்ள கூப்பனை நிரப்பி அதையும் தவருமல் அனுப்பவேண்டும்கூப்பனின்றிவரும் படங்கள் போட்டியில் சேர்க்கப்படமாட்டா. படங்கள் எமக்குக் கிடைக்க வேண்டிய கடைசித்திகதி 10-7-61.

### பரிசு

தெரிசெய்யப்படும் சிறந்த அழகுராணிப் படத்தை வரைந்தவருக்கு ரூ 15/-பரிசுகிடைக்கும்அதேபோல் அழகுராசா படம் வரைந்தவருக்கும் ரூ 15/- பரிசளிக்கப்படும். பரிசு பெற்றபடங்கள் புதினம் இதழில் வெளியிடப் படும் எங்கே உங்கள் கைவண்ணத்தைக் காட்டுங்கள் பார்க்கலாம்.

**அழகுராணி — அழகுராசா போட்டி!**

படம்வரைபவர் பெயர்: ..............................

..............................

முகவரி: ..............................

..............................

..............................

# 'சிறைச்சாலையிலிருந்து தப்பமுடியுமா?'

## மேயர் சவால் விட்டார்! ஆனுலும்,

# கைதிதப்பி விட்டான்!

1907ம்ஆண்டு டிசம்பர் வரையில் கனடாவில்ஒரேயொரு சிறைக்கூடந்தானிருந்தது. அதற்குப்பின் ஏராளமான பணச்செலவில் இன்னெரு சிறைக்கூடம் டொரன்டோவில் கட்டப்பட்டது. புதிய சிறைக் கட்டிடத்தைத் திறந்துவைக்க நியூலிஸ் கேர்ட் நகரத்தலைவர் ஊர்வலமாக அழைத்துச்செல்லப்பட்டார். வடஒன்டாரியோ மக்கள் திரளாக வந்து வைபவத்தில் கலந்து கொண்டனர்.

சிறைக் கூடத்தின் அமைப்பைக் கண்ணுற்ற நகரத்தலைவர் தமது தலைமை உரையில் கூறினர்.

"இந்தக்கட்டிடம் மிகவும் நவீனமானது. இச் சிறையிலிருந்து யாரும் தப்பிஓடிவிட முடியாதவகையில் இதுஅமைக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சிறையிலிருந்து யாராவது தப்பிஓடினல்அந்தநபரை நான்உடனேவிடுதலைசெய்வேன்"

அவரது வாக்கை நிறைவேற்ற மேயருக்கு அதிக நேரம் பிடிக்கவில்லை. அன்றிரவே குடித்துவிட்டுக் குழப்பம் செய்ததாக பென்னி ஜோன்ஸ்டன்டிக் பீட்டர் ஆகிய இருவர் சிறை செய்யப்பட்டனர். மறுநாள்காவலாளி அவர்களை அடைத்துவைத்திருந்த அறையைத் திறந்த போதுகைதிகள் மாயமாய் மறைந்து விட்ட விஷயம் தெரியவந்தது.

உடனே நகரத்தலைவர் வந்தார். தப்பி ஓடியவர்களை அழைத்துக்கேட்டார் அதிசயமாகஅவர்கள் ஒன்றும் சாதிக்கவில்லை. ஒரு 25 சதக்குத்தியைஉபயோகித்துக் கதவைத் திறந்துகொண்டு அவர்கள் வெளியேறியதாகக்கூறினுர்கள்.

மறுபடி கட்டிடத்தைத் திருத்தி அமைக்க நகரத்தலைவர் முயற்சித்தார். ஆனல் ஒன்டாரியோ அரசாங்கம் மேற்கொண்டு ஒருசதமேனும் செலவு செய்ய மறுத்துவிட்டது. அந்த நவீன சிறைக்கட்டிடம் இருந்த இடத்தில் [illegible]று ஒரு சிறீஸ்தகோவில் காட்சியளிக்கிறது.

## சோம்பேறிகள் ஒழிக!

திண்ணை தூங்கிச் சோம்பேறிகள் கையேந்தி வாழ்வதைத் தடுப்பதற்குச் சோஷலிஸ நாடொன்று ஒரு புதிய திட்டம் வகுத்து அமுல் நடத்தி வருகிறது.

வீதி ஓரத்தில் தண்ணீர்க்குழாய்கள் இருப்பதுபோல்நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் உயரமான பெட்டிகள் கைப்பிடியோடு நாட்டப்பட்டிருக்கின்றனவாம். பத்துச் சதம் வேண்டுமா? அந்தக் கைப்பிடியை முன்னுக்கும் பின்னுக்கும் பத்துமுறை தள்ளுங்கள். பெட்டிக்குள்ளிருந்து பத்துச் சதம் விழும்.

கைப்பிடியைப் பத்துமுறை ஆட்டும்போது விழும்பணத்தைக்காட்டிலும் பத்துமடங்கு அதிகமான வேலை அரசாங்க தொழிற்சாலைகளில் நடைபெறக்கூடியதாக அந்தப்பெட்டியில் யந்திரமொன்று விஞ்ஞானரீதியில் பொருத்தப்பட்டிருக்கிறதாம்.

தினம் 25-6-61

க்கு முன்னல்:

சநாயகியுடன்
வள் கணவன்

ான் திடீரென உள்
நுழைந்தபோது எனது
னும் அவரின் ஆசை
யும் ஒரே படுக்கை
படுத்திருப்பதைக்
டன். என்னைக் கண்
தும் அவர்கள் தங்
மூடிக்கொள்ளக் கூட
வில்லை. அவர்களை
நிலையில் பாக்கச்
ாததால் நான் வெ
சென்றுவிட்டேன்''
திருச்சி மாவட்டக்
டான்றில் நடைபெ
விவாகரத்து வழக்கில்
சியமளிக்கும் போது
எழில் பூத்துக் குலு
மனைவியான காந்தி
கூறினர். தன்னை
சியம் செய்துவிட்டு
நாயகியுடன் தனது
ன் வாழ்க்கை நடத்
ாகவும் எனவே தன
விவாகரத்து வழங்
டியாகவும் கோரி
மணி வழக்குத்
டர்ந்திருந்தாள்.
வனின் வழக்கறி
குறுக்கு விசாரணை
தார்.
ஏன் அங்கு சென்
ய்?
னது கணவன் அங்
சென்று நேரத்
தச் செலவிடுவதாக
றிந்தேன். உண்மை
என்று பார்ப்பதற்
க நேரில் சென்
ன்.
அங்கே என்னத்தைக்
ண்டாய்?
னது கணவனும்
ரிலுள்ள் ஆடவரை
பிடிக்கும்' அந்தப்
பண்ணும் ஒரே கட்
டில் இருந்தார்கள்.
ஆணும் பெண்ணும்
டிலில் இருப்பது
று?
ணும் பெண்ணும்
வரை யொருவர்
ணத்துக் கொண்டு
ந்த மேலோடு இரு
து முறையானதாக
க்குத் தெரியவில்
சாமி! (சிரிப்பு)
ஏன் உனது கண
னப் பிடித்து இழுத்
செல்லவில்லை?
ந்த பிறப்பாக இரு
மனுஷனை எப்படி
ழுத்துச் செல்வது!

ல் விசாரணை 28-ம்
ஒத்திவைக்கப்
ள்ளது.

களுக்கு அறிவிப்
வழி பத்திரிகைக
றிக்கைகள் விடுவ
தானே! தொண்
யும் செல்வநாய
தேடிப் பத்திரி
ர்கள் செல்வார்
தாரண பிரதிநிதி
று யாரையாவது
எழுதிய அறிக்
ன் (சொந்தமாக
எழுதுபவாகள்
ர்தான்!) பத்திரி
ர்களைத் தேடித்
அலையவேண்டும்?
அந்தப் பிரதிநிதி

ம்பலத்துறைவோன்







# சறுக்கி விளையாடிய சாவித்திரி.

''ஆற்றிலே தூண்டிபோட்டு அரைமணியாய்த் தேடியும் அகப்பட்டது ஒரேயொரு மீன்தான் ''என்று காஷ்மீரிலிருந்து சென்னை திரும்பியுள்ள சாவித்திரி கூறினர். காஷ்மீரில் தங்கியிருந்தபோது பனிக்கட்டியில் சறுக்கிவிளையாடினராம்.

''ஓய்வுக்காக என்கணவருடன் சென்றேன், ஆனல் ஓய்வெடுக்க முடியவில்லை. கால்கள் அலுக்கும்வரை நடந்து தீர்த்தேன்" என்று சாவித்திரி கூறினர்.

சென்ற மாதம் ஸ்ரீதரின் 'தேன் நிலவு' படத்துக்கான வெளிப்புறக் காட்சிகளில் நடிப்பதற்கு ஜெமினி கணேசன் காஷ்மீர் சென்றிருந்தார் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி காஷ்மீரில் ஓய் வெடுப்பதற்காக சாவித்திரியும் சென்றிருந்தார்.


காஷ்மீர் நதியில் நீரைக்கிழித்துக்கொண்டு செல்லும் சறுக்கு விளையாட்டு உண்டு. நதியில் ஒரு இயந்திரப்படகு முன்னே செல்லும். அதிலிருந்து இரண்டு நீளக் கயிறு பின்னே தொங்கும், அந்தக்கயிற்றைப் பிடித்துக் கொண்டு மெல்லிய பலகைகளில் கால்களை வைத்துக் கொண்டு நீர்மேல் நிற்க வேண்டும். படகு செல்லும்வேகத்தில்இந்தப்பலகைகள் நீரைக்கிழித்துக்கொண்டு வேகமாகச் செல்லும். இதில் செல்வது சுலபமல்ல. பலர் விழுந்தெழும்புவதுண்டு. ஆனல் சிலதினங்களுக்குள்ளேயே சாவித்திரி இந்தவிளையாட்டில் நிபுணியாகிவிட்டார்.

சாவித்திரியின் உடல் ஊதலாகத் தெரிந்தாலும் அவர் உடற்பயிற்சி விளையாட்டுக்களில் திறமைசாலி.

சமீபத்தில் நடிகர் தினவிழாக் கொண்டாடப் பட்ட போது நடிகைகளுக்கிடையில் ஓட்டப் போட்டியொன்றும் நடைபெற்றது. இந்தப்போட்டியில் முதல் பரிசு சாவித்திரிக்குத்தான் கிடைத்தது.

இச்சாவித்திரிதான் முன்னெருபோது ''நடிக்கவேண்டும்: நடித்துப்புகழ்பெற வேண்டும்'' என்ற ஆசையோடு சென்ற பொழுது ''உனக்கு நடிப்பே வராது. நீ போய் வாம்மா" என்று டைரக்டர் ஒருவரால் திருப்பி அனுப்பப்பட்டவர்.

சமீபத்தில் திரையிடப்பட்ட ராஜாமணிபிக்சர்ஸ்'பாசமலர்' படத்தில் திருமதி சாவித்திரி நடித்துள்ளார், உணர்ச்சிமிக்க கட்டமொன்றில் இவர் இப்படத்தில் நடித்த போது உணர்ச்சி வசப்பட்டு மூர்ச்சையுற்ருர். இதேபடத்தை சமீபத்தில் ஒரு தியேட்டரில் பார்த்துக் கொண்டிருந்த சாவித்திரி அந்தக் கட்டம் வந்ததும் கண்ணீர் விட்டழுதார். தியேட்டரிலிருந்தே வெளியேறினர்.



விரைவில் வெளிவரவிருக்கும் பாரகான் பிக்சர்ஸ் "நீதிக்கொருபெண்" என்ற படத்தில் பாலாஜியும் அழகி ஜமுனவும்.

# சுருள் செய்தி

## ஜெமினி—சாவித்திரி ஜாகர்த்தா பயணம்

ஜாகர்த்தாவில் அடுத்த மாதம் நடக்கவிருக்கும் சினிமாப்பட விழாவில் கலந்துகொள்ள ஜெமினி கணேசனும், சாவித்திரியும் ஜூலை 10-ந் திகதி புறப்படுகிறார்கள்.

சென்னை பிலிம் வர்த்தக சபைத் தலைவர் திரு. ஏ. எல். ஸ்ரீனிவாசன் தலைமையில் செல்லும் இந்திய நடிகர் கோஷ்டி சிங்கப்பூர் மார்க்கமாக ஜாகர்த்தா செல்லும்.



## சாவித்திரிக்குக் கால் உடைந்தது! கார் ரேஸில்

சித்தூர், பழமானேரியில் சமீபத்தில் கார் ரேஸ் ஒன்று நடந்தது. ரேஸில் கலந்து கொண்ட அத்தனை பேரும் பெண்கள். கூட்டத்துக்கு கேட்கவேண்டுமா?

சினேகிதிகள் ஐந்தாறு பேருடன் மிடுக்காக காரை ஓட்டினர் சாவித்திரி. கார் காற்றெனப் பறந்தது. அவருக்குத்தான் வெற்றி கிடைத்திருக்கும். ஆனல்......விதி சதிசெய்துவிட்டது. கார் தடம் புரண்டதால் எல்லோருக்கும் பலத்தகாயம். சாவித்திரிக்குக் கால் முறிந்து.........

திகைக்காதீர்கள். "எல்லாம் உனக்காக" என்ற படத்திற்காக எடுக்கப்பட்ட வெளிப்புறக் காட்சிதான் இது. இப்படத்தில் கால் ஊனமாக நடித்து எல்லோர் உள்ளத்தையும் உருக்குகிருராம் சாவித்திரி.

## 2 டிக்கற் விற்றுவிட்டு சினிமா காட்டினர்கள்!

திருச்சி பொன்மலைப் பட்டியில் சினிமாப்படம் நடந்து கொண்டிருந்தது. திடீரென்று நகரசபையினர் உள்ளே சென்று சோதனை நடத்தினர். அங்கு படம் பார்த்துக் கொண்டிருந்தவர்களில் இருவருக்கு மட்டுமே டிக்கெட் வழங்கப்பட்டிருந்தது. மற்றவர்கள் அனைவருக்கும் டிக்கெட் வழங்கப்படவில்லை,

## எம். ஜி. ஆரைக் கொல்லச் சதி

அழகான தன் முகத்தை அலங்கோலப்படுத்தவும் தன்னைத் தீர்த்துக்கட்டி விடவும் சதி நடந்ததாக எம். ஜி. ராமச்சந்திரன் விடுத்த அறிக்கையொன்றில் குறிப்பிட்டிருக்கிருர்.

## குருஷ்சேவின் வாழ்க்கை படமாகிறது

குருஷ்சேவின் வாழ்க்கையைச் சினிமாப் படம் பிடிக்க ஏற்பாடுகள் நடைபெறுவதாக மொஸ்கோ ரேடியோ அறிவித்துள்ளது. யுத்தத்துக்கு முன் அவர் கம்யூனிஸ்ட் கட்சியைத் திறமையாக நிர்வகித்தது பற்றியும், இரண்டாவது யுத்தத்தில் ரஷ்யர்கள் அடைந்த வெற்றிபற்றியும் இப்படத்தில் இடம்பெறுமாம்.

## கரிக்கூப்பர் உயில்

ஹொலிவூட் பிரபல நடிகர் கரிகூப்பர் சமீபத்தில் புற்றுநோயால் மரணமடைந்த செய்தி யாவரும் அறிந்ததே. இப்பொழுது அவருடைய உயில் வெளியாகியிருக்கிறது.

அவருடைய சொத்தின் மதிப்பு பத்து லட்சம் டொலர்கள். தன் வருமானத்தின் பெரும் பகுதியை அவரது மனைவியும் மகளும் அனுபவிப்பார்கள். உறவினர்களுக்கு ஆளுக்கு ஐயாயிரம் ஒதுக்கியிருக்கிருர்.

சினிமா நடிகர்கள் நிவாரண நிதிக்குப் பத்தாயிரம் ஒதுக்கியிருக்கிருர்.

## இரட்டை வேடத்தில் எம். ஜி. ஆர்.

எம். ஜி. ஆரின் அடுத்த சமூகப் படம் மின்னல் வேகத்தில் தயாரிக்கப்படவிருக்கிறது. இதன் திரைக்கதையை தாதா மிராஸி எழுதியிருக்கிருர்.

இதுவரை நடித்திராத புதுமையான இருவேடங்களில் — இருவித கதாபாத்திரங்களாக—எம். ஜி. ஆர், நடிக்கப்போகிருராம். இப்படத்தில் சரோஜாதேவி, எம். ஆர். ராதா, நம்பியார் ஆகியோர் பிரதமபாகங்களில் நடிப்பார்கள்.

"சைவ ஆலயங்களில் திருமண வைபவம் நடத்தக் கூடாது"
என்ற எமது கட்டுரைப் போட்டி 30-6-61-ல் முடிவடைகிறது.

ஸ்ரீ லங்கா கஷ்ட நிவாரண சங்கம்
76-3, கஸ்தூரியார் வீதி, : : யாழ்ப்பாணம்.

அடுத்த இதழில்: எமது சென்னை நிருபர் பி. வி. ஹி எழுதும் மலையாள சினிமாச் செய்திகள்.



# 'மே...மே..' கத்திய புலிக் குட்டி!

ஒரு மலைச்சாரிவில் மலையாடுகள் பல மேய்ந்து கொண்டுசுகமாகவாழ்ந்து வந்தன. பூரண கர்ப்பிணியான புலி ஒன்று ஒருநாள் அந்த மலைச்சரிவை அடைந்தது. புலிக்கோ பசிமிகுதியாக இருக்கவே, ஆடுகளிலொன்றை எப்படியாவது கொன்று தின்ன வேண்டுமென்று பாடுபட்டது! புலி நெருங்கும் பொழுது ஆட்டுக்கூட்டம் வெகுஎளிதில் செங்குத்தான மலைச்சரிவில் விரைந்து வந்து கொண்டிருந்தன. புலியால் ஆடுகளைப்போல் மலைச்சரிவில் அவ்வளவு எளிதில் ஏறிச்செல்ல முடியுமா? பசியின் கொடுமையால் விடாப்பிடியாய் ஆட்டு மந்தையைத் தொடர்ந்து மலை உச்சிவரையில் புலி ஏறிவிட்டது. கடைசியில் கோபாவேசம் கொண்டு ஒரு ஆட்டின்மேல் தாவிக் குதித்தது. தாவும் வேகத்தில் புலி இடறி விழுந்தது. முழுகர்ப்பிணியான புலிக்குப் பிரசவம் ஆகிவிட்டது. ஒரு புலிக்குட்டி பிறந்தது. ஆனல் தாய்ப்புலி மலை உச்சியிலிருந்து உருண்டு விழுந்து உயிர் துறந்தது. அந்தப் புலிக் குட்டியைக் கண்ட ஒரு ஆடு அதன்மேல் இரக்கம்கொண்டு பாலூட்டி வளர்த்து வந்தது. ஆட்டுப் பாலைக் குடித்துப் புலிக் குட்டி கொழு கொழு வென்று நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளரத் தொடங்கியது. ஆட்டுக் கூட்டத்துடனேயே வளர்ந்து வந்த புலிக் குட்டி ஆடுகளைப்போல் ''அம்மே...... அம்மே'' என்று கத்துவதற்குக்கற்றுக்கொண்டது.

ஒருநாள், மற்ருேர் புலி இம்மலைச்சரிவில் வந்து சேர்ந்தது. கூட்டமாக ஆடுகள் இருப்பதைக் கண்டு அதன்மேல் பாய்ந்தது. ஆடுகள் ஒரேஓட்டமாய் ஓடித் தப்பிவிடன. ஆனல் அவைபோல எளிதில் மலைச்சரிவில் ஓடமுடியாத புலிக்குட்டி மட்டும் வேட்டையாட வந்த புலியிடம் அகப்பட்டுக்கொண்டது. ஆடுகள் வளர்த்த புலிக்குட்டி ஆட்டுக்குட்டிகள் அழுவதுபோல் அலறியது!

இதைக்கண்ட புலி "குலத்தின் மதிப்பைக் கெடுக்கவந்த கோடரிக் காம்பே! ஏன் இப்படி ஆடுபோல் கத்துகிருய்? புலி இனத்தில் பிறந்த நீ இப்படி ஆடுபோல் கத்தலாமா''? என்றுகேட்டது. ஆட்டுக்குட்டி ''நான் புலியல்ல, நான் புலியல்ல, நான் புலியல்ல: ஆடுதான் என்னை விடு; என் தாயிடம் போகிறேன் போகிறேன்; அம்மே....அம்மே'' என்று ஆடுபோல அலறியது.

''இனி நீ இங்கே இருந்தால் குலத்தின் பெயருக்கே கேடுவந்துவிடும். என்னுடன் வா'' என்று வேட்டையாட வந்த புலி, ஆடுகள் வளர்த்து வந்த புலிக்குட்டியைத் தன் வாயில் கவ்வி ஒரு குகைக்கு எடுத்துச் சென்று சிறிது மாமிசத் துண்டங்களைக் கொடுத்துப் புசிக்கச்சொன்னது.



முதலில் புலிக் குட்டி ''பாலைத்தான் குடிப்பேன் மாமிசம் வேண்டாம், மாமிசம் வேண்டாம், மாமிசம் வேண்டாம், அம்மே......அம்மே'' என்று அழத் தொடங்கியது. ஆடுகள் இருந்தால்தானே இதற்குப் பால் கொடுக்க! இப் புலிக்குட்டி ஒன்றையும் தொடாமல் பட்டினி கிடந்தது. சில நாள் கழிந்ததும் பசிதாங்க முடியாமல் புலி கொடுத்த இறைச்சியைப் புசிக்கத் தொடங்கியது. நாளடைவில் அதன் உண்மைக் குணங்கள் வளரத் தொடங்கி மற்றப் புலிகளுடன் வேட்டையாடத் தொடங்கிவிட்டது.

## மூளைக்கு வேலை.

ஒரு எண்ணெய்க் குதத்தில் எட்டுக்கலன் தகரம் நிறைய எண்ணெய் இருந்தது அளவைகள் 5 கலன் தகரமும் 3 கலன் தகரமும் இருந்தன. இந்த அளவைகளால் 4 கலன் எண்ணெய் சரியாக அளந்து கொடுக்க முடியுமா?

விடை: அடுத்த இதழில்.

## உங்களுக்குத் தெரியுமா?

அமெரிக்க வானொலியில் எத்தனை மொழிகளில் நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்படுகின்றனவென்று உங்களுக்குத் தெரியுமா?

தினசரி 37 மொழிகளில் அமெரிக்கா வெளியுலகோடு பேசுகிறது,

* * *

[illegible]ருவி பைலட் கமாண்டர் ஜோன் எவ். டேவிஸ், அதிவிரைவாக ஜெட் விமானத்தைச் செலுத்தி ஒரு உலக [illegible]கோட்டை ஸ்தாபித்தார்

மணிக்கு 1,390·21 மைல் வீதம் விமானத்தைச் செலுத்திய இவர் அமெரிக்காவை சேர்ந்தவர்.

* * *

இலங்கையில் ஆயிரம் பேருக்கு 27 பேர் மட்டுமே தினமும் பத்திரிகை வாங்கிஞர்கள் என்று கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது. இந்தியாவில் ஆயிரம் பேருக்கு ஆறு பேர் பத்திரிகை வாங்குகிருர்கள். இங்கிலாந்தில் ஆயிரத்துக்கு 596 பேர் பத்திரிகை வாங்குகிருர்கள். அமெரிக்காவில் ஆயிரத்துக்கு 354 பேர் பத்திரிகை வாங்குகிருர்கள்.

# புதையலுக்கு ஆசைப்பட்டான்; போட்டியிலே தோல்வியுற்ருன்!

அரசாங்கம் நடத்திய விவசாயப் போட்டியில் கணபதிக்குத்தான்சென்ற வருடமும் முதற்பரிசு கிடைத்தது. இரண்டாம் பரிசு முருகேசுவுக்குக் கிடைத்தது. இவ்வருடப் போட்டிக்கு இன்னும் சில தினங்களே பாக்கியிருந்தன. இந்த முறையும் கணபதியே முதற்பரிசை தட்டிக் கொண்டு போய் விடுவான் என்று எல்லோரும் பேசிக்கொண்டனர். முருகேசுவும் விடாமுயற்சியோடு பாடுபட்டான்.

கணபதியின் வேலையாள் நாகன் மிகுந்த உழைப்பாளி. எந்நேரமும் தோட்டத்தில் வேலை செய்து கொண்டேயிருப்பான்.

முருகேசு ஒரு தந்திரம் செய்தான். போட்டிக்கு முதல்நாள் நாகனை அழைத்துக் கூறினன்: ''போட்டிமுடிந்தபின்தான் உனக்கு வேலைஇருக்காதே... எனக்கு ஒரு உதவி செய்ய முடியுமா?''

''சொல்லுங்கள், முடியுமானல் செய்கிருேன்.''

''எனது பாட்டன் சிங்கப்பூரில் செத்துப்போனதுதான் உனக்குத் தெரியுமே... அந்த மனிதன் யாருக்கும் தெரியாமல் பணத்தை இங்கு எங்கோ புதைத்து வைத்திருக்கிருர். அந்தக் குறிப்பு இப்பொழுதுதான் எனக்குக் கிடைத்தது. குறிப்பினுள்ளபடி இடத்தைத் தேடிப்பிடித்து நிலத்தைத் தோண்டிப் பணத்தை எடுக்க வேண்டும். எனக்கு நீ உதவி செய்தால் கிடைக்கும் பணத்தில் உனக்குஞ்சிறிது பங்கு தருவேன்...''

''மனிதன் எங்கே வைத்திருப்பானே ....?''

''என் தோட்டத்தின் எல்லையிலிருக்கும் ஆலமரத்தடியிலிருந்து சரியாக முந்நூறு யார் கிழக்கே சென்று பின்புறமாக நூறு யார் செல்ல வேண்டும். அந்த இடத்தில்தான் பணம் புதைக்கப்பட்டிருக்கிறது. நீ ஒய்வு நேரத்தில் வந்தாயானல் இருவருமாய் நிலத்தை வெட்டிப் பார்க்கலாம்....''

நாகன் தலையை அசைத்துவிட்டுச் சென்ருன். அவன் மூளை தீவிரமாக வேலை செய்தது. 'முழுப் பணத்தையும் நானே எடுத்துவிட்டால்...........'

அன்றிரவே ஆலமரத்திலிருந்து அளக்கத் தொடங்கினன். சரியாகப் பணமுள்ள இடம் கணபதியின் தோட்ட மத்தியிலிருந்தது. விடிந்தால் போட்டி. ஒரு கணம் யோசித்தான். காலதாமதமானல் கிடைக்கும் பணம் கையை விட்டுப் போய்விடும். வெட்டினன், வெட்டினன் .விடியும்வரைவெட்டினன். கணபதியின் தோட்டம் நாசமானதுதான் மிச்சம். '

இவ்வருடப் போட்டியில் முருகேசுவுக்குத்தான் முதற்பரிசு கிடைத்தது,

ROYAL DISPENSARY.
Phone: 491 : : JAFFNA.

# நாய்மீது காதல் வைத்த நங்கையர் திலகம்

## 'வீடு போனாலும் நாயை விடமாட்டேன்' என்ற விதவை.

### நாய்க் காதல்—1

"நான் வேண்டுமா, அல்லது நாய் வேண்டுமா?" என்று கேட்டான் காதலன். அவள் நாய்தான் வேண்டுமென்றாள். காதல் முறிந்தது. கல்யாணமும் நின்றுவிட்டது.

செஷயர் என்னுமிடத்தில் இது நடந்தது. அவளுக்கு 25 வயது. அழகான யுவதி. ஒரு கடற்படைஅதிகாரியைஅவள் காதலித்தாள்.

"நாங்கள் ஆரம்பத்தில் ஒருவரையொருவர் உயிராக நேசித்தோம். எனக்கு நாய்கள்மீது அதிக ப்ரியம். நாளடைவில் இதைப்பற்றி அவர் முரண்டு செய்யஆரம்பித்தார். தகராறு சிறிது சிறிதாக முற்றிக்கொண்டு வந்தது. கல்யாணப்பேச்சுவந்தபோது அவர்கேட்டார் 'நான்வேண்டுமா? அல்லது நாய் தான் வேண்டுமா?' என்று, 'நாய் தான் வேண்டும்' என்று கூறிவிட்டேன். என்று அந்தப் பெண் கூறினாள்.

### நாய்க் காதல்—2

அவள் ஒரு விதவை. வயது 41. அவளிடம் நாலு வயது நிரம்பிய மூன்று நாய்கள் இருந்தன. அவைகள்மீது அவள் உயிரையே வைத்திருந்தாள். வொகிங்ஹாம், பேர்க்ஷயர் கிராமச் சங்கம் கட்டிக்கொடுத்திருந்த வீட்டில் இவள் வசித்துவந்தாள். மேற்படி வீட்டிலிருந்து நாய்களை அப்புறப்படுத்த வேண்டும் அல்லது வேறோர் வீட்டுக்குக்குடிபோக வேண்டும். என்று கவுன்ஸில் கட்டளை பிறப்பித்தது.

"எது வந்தாலும் சரி நாய்களை விட்டுப்பிரிய என்னால் முடியாது. என்னால் முடிந்த வரை போராடப்போகிறேன்" என்று அந்தப் பெண் கூறுகிறாள்.

அவன் ஒரு பாடசாலை மாணவன். அவனிடம் ஒரு நாயிருந்தது. ஓய்வு நேரத்தை அவன் சதா அந்த நாயுடனே கழிப்பான்.

### நாய்க் காதல்—3

பக்கத்து வீட்டுக்காரர் வளர்க்கும் பூனைகளை இந்த நாய் துரத்துகிறதென்றும் அதனால் ஒரு 'பெட்டிசம்' எழுதி அவர்கள் போடப்போகிறார்களென்றும் அவனுக்குத்தகவல் கிடைத்தது. கையில் கொஞ்சம் காசு கிடைத்ததும் பையன் நாயையும் அழைத்துக்கொண்டு வீட்டைவிட்டே கம்பி நீட்டிவிட்டான்.

பெற்றோரும், பொலீஸாரும் பையனைத் தேடியலைந்தனர். கடைசியில் இல்க்கிலே என்ற இடத்தில் ஆசாமியும் நாயும் அகப்பட்டனர். கட்டுக்கடங்காத நாய்களை மட்டும், அதுவும் கோட் உத்தரவு பெற்றே சொல்ல புடியும் என்று பொலீஸார் விளக்கிய பின்பே பையன் வீடு திரும்பச் சம்மதித்தான்.

# குழந்தைகளே இல்லாத அதிசயக் கிராமம்.

சுவிட்ஸர்லாந்திலுள் ளரசா என்னும் கிராமம் முன்னொரு காலத்தில் சுமார் முந்நூறு பேர்களைக்கொண்டதாகவிருந்தது. குழந்தைகள் அங்குமிங்கும் ஓடியாடிவிளையாட பெற்றோர்சமீபத்திலுள்ள வயல்களில் வேலை செய்தனர், பெருநகரங்களோடு தொடர்பற்ற இந்தக் கிராயத்தில் விவசாயம் செய்வது உடலுழைப்பு மிகுவதேயல்லாமல் வருமானம் குறைவு என்பதை உணர்ந்தமக்கள் சிறிது சிறிதாகப் பெருநகரங்களை நாடிச்சென்றனர்.

தங்கிய ஒருசிலர் தனித்தனர். இங்கு விவாகம் நடைபெறுவது வெகுஅபூர்வம். குழந்தைகள் பிறப்பதும் அப்படியே. இங்கு கடைசியாக ஒருகுழந்தை பிறந்து இப்பொழுது பதினான்கு வருடங்களாகிவிட்டன. அந்தக்குடும்பமும் இப்பொழுது சமீபத்திலுள்ள லொக்கார்னோ என்ற ஊருக்குப்போய் விட்டது.

இந்தக்கிராமத்தில் குழந்தைக் குரல் குதிரைக் கொம்பு. இங்கு தற்பொழுது வசிக்கும் ஓரிருவயது முதிர்ந்தவர்களுக்குக் குழந்தைப் பிராயநினைவு மட்டுந்தான் மிகுந்திருக்கிறது.

# அமெரிக்க ஜனாதிபதிக்கு வாரம் 30 ஆயிரம் கடிதம்!

அமெரிக்காவின் முன்னைய ஜனாதிபதிகளைக் காட்டிலும் தற்போதைய ஜனாதிபதி கென்னடிக்கு அதிகமான கடிதங்கள் தினமும் வந்து குவிகின்றனவென்று ஜனாதிபதியின் பத்திரிகைக் காரியதரிசி திரு. சலிங்கர் கூறுகிறார்.

ஜனாதிபதி ஐசன் ஹோவர் பதவிக்கு வந்த ஆரம்ப காலத்தில் ஒருவாரத்துக்கு 15 ஆயிரம்கடிதங்கள்வரை வந்ததாம். ஆனால் கென்னடிக்கு ஒரு வாரத்தில் 30 ஆயிரம் கடிதங்கள் வருகின்றனவாம். இவற்றுள் ஐயாயிரம் கையெழுத்துக் கோரியும் எழுநூறு வேலை கோரியும் வருகின்றன. கென்னடியின் இளம் மனைவிக்கும் இக்கடிதங்களில் பங்குண்டு. கென்னடியின் மகள் கரோலினுக்கு வாரத்தில் நூறு கடிதங்களும் சுமார் எண்பது பரிசுகளும் வருகின்றன. பரிசுகள் வெள்ளை மாளிகைக்கு வந்ததும் பிரிக்குமுன் 'எக்ஸ்ரே' படம் பிடிக்கிறார்கள். உள்ளே ஏதாவது 'அப்படியிப்படி' இருந்து விட்டால் ஆபத்தல்லவா?

ஒருவர் தனது குழந்தைகள் அளித்த அன்பளிப்பு இரண்டு டொலர்களைக் கென்னடிக்கு அனுப்பி வைத்தார். தமது ஜனாதிபதிக்கு ஏதாவது உதவி செய்யவேண்டுமென்று குழந்தைகள் ஆசைப்பட்டனவாம்.

## இந்தப் பூவுலகில்

# வீடு கிடைக்கவில்லையா?

## வாருங்கள் சந்திர உலகத்துக்கு! அங்கே குசாலாக வாழலாம்!

"சந்திரனில் வசிப்பது ஒன்றும் கஷ்டமான காரியமல்ல. அங்குள்ள குறைந்த வாயு அமுக்கம்" நோயாளிகள் கூட தேகப்பயிற்சிகளிலும், பல்வகை விளையாட்டுக்களிலும் கலந்து கொள்ளச்சாத்கமாயிருக்கும்" என்றுவிஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.

1980-ம் ஆண்டளவில் 'குயின்மேரி' போன்ற பெரியவான [illegible]வெளிக்கப்பல் பூமியிலிருந்து சந்திரனுக்கும் சந்திரனிலிருந்து பூமிக்கும் சர்வசாதாரணமாகப்பிரயாணம்செய்யக் கூடியதாயிருக்குமென்று அமெரிக்க விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். செயற்கைச் சந்திரனை அனுப்புதல் ஒரு ஆரம்பநடவடிக்கையே.

சாதாரண மக்களைச் சந்திரனுக்கு அழைத்துச் சென்று குடியேற்றுவதே அவர்களின் நோக்கமாம். ஆரம்பகாலத்தில் வீட்டுப் பிரச்சினை தலைகாட்டாது. முதலில் எல்லோரும் ஒரு பெரிய மண்டபத்திலேயே வசிக்க வேண்டியிருக்கும். எரிகற்கள், ஒளிக்கதிர்கள் ஆகிய வற்றிலிருந்து நம்மைப் பாதுகாக்கக்கூடிய சாதனங்கள் கொண்டதாக அந்த மண்டபம் அமைக்கப்படுமாம்.

மேலும் அந்தமண்டபம் போதிய பிராணவாயு கொண்டதாகவுமிருக்கும். மழை, பனி, குளிர், புயல் ஆகிய அபாயங்கள் இப்பொழுது பழைய கதையாகிவிட்டன.

சந்திரனின் குறைவான ஆகரணசக்தி மனிதன் உடல்நலத்தோடு வாழ்வதற்கு உகந்தது. "காலகதியில் சந்திரனின் நிலை பூமியை விடச்சிறந்ததாயிருக்கும்" என்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.

## நம்ப முடியுமா?

இங்கிலாந்திலே சென்ற 19-ம் நூற்றாண்டுவரை ஒரு விநோதமான தண்டனை முறை அமுலில் இருந்துவந்தது. கண்டபடி சண்டைபோடுகிற அல்லது வேறு குற்றம் புரிகிற பெண்ணை ஒரு வித சாய்வு நாற்காலியில் கட்டி அவளுடைய வீட்டுவாயிலில் விட்டுவைப்பார்கள். வீதியால் செல்பவர்கள் அவள்மீது கற்களை விட்டெறியலாம்! சில சமயங்களில் ஒரு தள்ளுவண்டியில் வைத்து ஊரைச் சுற்றிக் கொண்டுவந்து, பின்னர் மேலும் கீழும் ஆடக்கூடிய ஒரு துலாக்கோலில் வைத்து தண்ணீருக்குள் அமுக்கி அமுக்கி வெளியே எடுப்பார்கள்! நாகரிகத்துக்குப் பெயர்பெற்ற இங்கிலாந்திலே இவ்வித தண்டனை முறை இருந்தது. அதிசயமாக இல்லையா? நேர்மையற்ற முறையில் மது பானம் வடிப்போருக்கும் ரொட்டி சுடுவோருக்குங் கூட இவ்வித தண்டனை கிடைப்பதுண்டு.

# வட துருவத்தில் அணுசக்திக் கிராமம்

வடதுருவப் பகுதியில் உறை பனியைக் குடைந்து ஒரு கிராமத்தை அமெரிக்க இராணுவத்தைச்சேர்ந்த எஞ்ஜினியர்கள் அமைத்திருக்கிறார்கள். வெளிச்சத்தை உண்டு பண்ணவும், பனிக் கட்டிகளை உருகச் செய்து தண்ணீர் பெறவும் இங்கு அணுசக்தி உபயோகிக்கப்படுகிறது.

இக்கிராமம் காம்ப்சென்சர் என்றழைக்கப்படுகிறது. வட துருவத்திலிருந்து சுமார் 800 மைல் தூரத்தில் கிரீன்லாந்தில் இக்கிராமம் அமைக்கப்பட்டிருக்கிறது. இங்கு நூறு அமெரிக்க விஞ்ஞானிகளும், தொழில் நுட்பக் கலைஞர்களும் தங்கியிருந்து பூமியின் நிலைபற்றி ஆராய்ச்சி நடத்துவர்.

அமெரிக்க அரசாங்கமும் டனிஷ் அரசாங்கமும் செய்து கொண்ட உடன்படிக்கையின் மீது இக்கிராமம் அமைக்கப்பட்டது.

Registered as a newspaper at the G. P. O.

# புதினம்

சுவையான செய்திக் கிழமை இதழ்...

வரதர் வெளியீடு

## சங்கதி தெரியுமா?

உருத்திரபுரம் அரசினர் பாடசாலை வளவில் கண்டெடுக்கப்பட்ட சிவன், பார்வதி விக்கிரகங்களின் கதியென்ன? ஓராண்டுக்குமுன் சிவனும் பார்வதியும் என ஒப்புக்கொள்ளப்பட்டு உரியபத்திரங்களிற் பதிவு செய்யப்பட்ட அந்தப் புராதன விக்கிரகங்கள் இப்போது மத மாற்றம் செய்யப்பட்டு விட்டன என்று ஆச்சரியப்பட்டார் ஆசிரியர் ஒருவர். ஏன் மாற்றப்பட்டன, எப்படிமறைக்கப்பட்டனஎன்பதெல்லாம் இப்போதைக்கு இரகசியமாகவே இருக்கட்டும் என்கிறார்கள் நாலுசங்கதியும் அறிந்த நம்மூர் ஆராய்ச்சிப் பிரியர்கள்,

*    *

இலங்கையின் பிரபல பத்திரிகாசிரியர் ஒருவர் தமது பதவியை உதறித் தள்ளிவிட்டு, ஆறுதலும், நிம்மதியும், தமிழ் இலக்கிய ஆராய்வு செய்யும் சூழ்நிலையுமுள்ள இன்னொருவேலைக்குப் போகிறார் என்பது தெரியுமா? அவர் அப்படிச் செய்வதற்கும்' வரப்போகும்பத்திரிகைச் சட்டத்துக்கும் ஏதோ தொடர்பு இருக்க வேண்டுமென விஷயமறிந்தவட்டாரங்களில் பேசிக்கொள்ளப்படுகிறது.

*    *

பரந்தன் ரசாயனத் தொழிற்சாலையில் அடிக்கடி பழுது ஏற்படக்காரணமாருந்தவர் அங்கிருந்துசொந்தஊருக்குத்திருப்பியனுப்பி வைக்கப்பட்ட தொழில் நிர்வாகி கோபால்ராவ்தான் என்ற சங்கதி இப்பேதே அரங்கத்துக்கு வந்திருக்கிறது. இனிமேல் இயக்க முடியாதென அவரால் புறக்கணிக்கப்பட்ட இயந்திர பாகங்கள் இப்போது ஒழுங்காக வேலை செய்வதற்குக் காரணமாயிருப்பவர் யாழ்ப்பாணவாசியான ஒரு தொழில் நுட்ப நிபுணராகும். தொழிலாளர்களெல்லாம் சுதேசியம்பேசி அவரோடு பூரணமாகஒத்துழைக்கிறார்களென்றால் இனி வெற்றிக்குத் தடைதான்ஏது.

*    *


'இரத்தம் தேவை, இருப்பவர் தாருங்கள்' என்று யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியிலுள்ள இரத்த வங்கி இரு கைநீட்டி இப்போது இரந்து வருகிறது. தானம் செய்ய இன்றுவரை யாருமே வலிந்து முன்வரவில்லையாம். உதிரத்தால் ஒப்பமிடும் துணிச்சலுள்ளவாலிபர்களுக்கு இது ஏன் ஒரு அறைகூவலாக இருக்கக்கூடாது?

*    *

யாழ்தேவியில் சாதாரணஉடையில் வந்த பொலிஸ்காரர் இருவர் யாழ்ப்பாணம் புகையிர நிலையத்தில் நின்ற வாடகை மோட்டார் ஒன்றில் வலுக்கட்டாயமாகநுழைந்து அடம்பிடித்தது ஏன் என்ற சங்கதி யாருக்காவது தெரியுமா? சாரதியின் பிடிவாதத்தால் அவர்கள் எத்தனை மணிநேரம் அந்த வண்டிக்குள் தவமிருந்தார்கள்?

*    *

காலி மாநகர சபைக்கு இடமாற்றம் செய்யப்பட்டகமிஷனர் திரு சண்முகம் மாதங்கள் இரண்டாகியும் பதவியை ஒப்புக்கொள்ள மறுப்பதேன்? பதினைந்து நாள் சம்பளத்தை அவர் இழக்கக் காரணமாக இருந்த சங்கதி தான் என்ன?



இவன் சாதாரண ரிக்ஷோக்காரன்தான். கிழவன்தான். ஆனால் இவனது நாட்டுப்பற்றும் ஹாஸ்ய உணர்ச்சியும் யாருக்குங் குறைந்ததல்ல. இவன் தன் பேச்சுவன்மையால் ஒரு அமெரிக்கரைத் தோற்கடித்தான். எப்படித் தெரியுமா?

இலங்கையைப் பார்க்கவந்த அமெரிக்கரொருவர் கொழும்புத் துறைமுகத்துக்கு முன்னால் நின்ற இவனது ரிக்ஷோவில் ஏறினார். கொழும்பு நகரெங்கும் இவரை வைத்து இழுத்துக் கொண்டு சென்றான் இவன்.

''இது என்ன கட்டிடம்''—அமெரிக்கர் கேட்டார்.

''டைம்ஸ்'' கட்டிடம் சேர்''-இவன் பதிலளித்தான்.

''ஓ இப்படிக் கட்டிடங்கள் எங்கள் நாட்டில் இரண்டுமணி நேரத்தில் கட்டி முடித்து விடுவார்கள்........இது என்ன கட்டிடம்?''

''இதுதான் புதிய செக்ரெட்டேரியட் கட்டிடம் சேர்''

''இதைப் போன்ற ஒரு கட்டிடத்தை எங்கள் நாட்டில் இரண்டு வாரத்தில் கட்டிமுடித்து விடுவார்கள்... .....இந்த வரிசைக் கட்டிடங்கள்?''

இவைகள்தான் இங்குள்ள பெரிய வியாபார நிலையங்கள், இது காகிள்ஸ், மில்லேஸ்........''

''இப்படி ஒரு வரிசையை எங்கள் நாட்டில் இரண்டு மாதங்களில் கட்டி முடித்து விடுவார்கள்........ஆகா, இந்த அழகான வெள்ளைக் கட்டிடம் என்ன?''

அவன் சிறிது யோசித்துவிட்டுப் பதில் சொன்னான்: 'எனக்குத் தெரியாது சேர். காலையில் நாங்கள் இதே வழியால்நான் போனோம். அப்பொழுது இந்தக் கட்டிடம் இதில் இருக்கவில்லை. இந்த இடம் ஒரே வெளியாகக் கிடந்தது!''

அது கொழும்பு நகரமண்டபம் என்பது அவனுக்குத் தெரியும். ஆனாலும் அவன் அதைக் கூறவில்லை. ஏனென்று உங்களுக்குத் தெரியுமல்லவா?

(7-ம் பக்கத்தொடர்ச்சி)

திரு. இராசசூரியர்மீது அடக்குமுறை ஆயுதம் அன்று அடிக்கடி பாவிக்கப்பட்ட பழக்கத்தினாற் போலும் அதற்கு மற்றும் ஒரு சில உறுப்பினர்கள் இலக்கானார்கள். தண்ணீர் வரிபற்றிய சர்ச்சை எழுந்தபோது பேசமுயன்ற திரு. அழகையாவை நோக்கி 'இருங்கள்மாஸ்ரர்' என்றகட்டளைபிறந்தது. மற்றொரு சமயம் திரு. பி.எம். யோன்எதையோ சொல்ல முயன்றார். அவர்தம்பரந்த அனுபவத்தில் அடிக்கடி எழுந்து அபிப்பிராயம் கூறும் பழக்கமுடையவர். ஆயினும் அன்று அந்த அனுபவஉரைக்கும்வாய்ப்பூட்டுத்தான் கிடைத்தது.

### இந்து நேசனும் இலட்சுமிகாந்தனும்

கூட்டம் முடிந்து எல்லோரும் மண்டபத்தைவிட்டுவெளியேறிக்கொண்டிருந்தசமயம் மேயருக்கும் பத்திரிகைநிருபர்ஒருவருக்குமிடையில் நடந்த சம்பாஷணையொன்றுகாற்றில்மிதந்து வந்தது. கடுகடுப்பான அந்தச் சம்பாஷணையில் 'இந்து நேசன்' 'இலட்சுமிகாந்தன்' என்ற பதங்களும் இடம் பெற்றன!!!

—

**கற்பனை—நடிப்பு.**

சென்ற இதழில் வெளியான 'பிள்ளை பெற்றால் அழகு போய்விடுமே ?' என்ற விஷயம் கற்பனைக் கதை. சில வாசகர்கள் இதைத் தவறாக உண்மையெனக் கருதியதாகத் தெரிகிறது. அதேபோல இவ்விதழில் வெளிவந்துள்ள கதையும் கற்பனையே. படங்கள் நடிப்பு.

இப்பத்திரிகையை அச்சிடுவித்து வெளியிட்ட ஆசிரியர்: பொன்னாலை தி. ச. வரதராசன்
அச்சுப்பதிவு: ஆனந்தா அச்சகம், 226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். போன்: 348. தந்தி: 'அச்சகம்'